உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர்: தமிழ்ப்பூஷணம் ஸ்ரீமான் - வீ. ஆர். கேய்க்வார்.

தொகுதி 2	ரக்தாக்ஷிஹு ஆனிமீ 1924ஹு ஜூன்மீ	பகுதி 5

கடவுள் வணக்கம்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை,
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்,
கோமாற்கே நாமென்னும் மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே. (அப்பர்).

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்விரே யாமாகிற்
றங்காவினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே (திருமந்திரம்.)

ஊருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல யித்தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதம் கச்சியே கம்பனே.
(பட்டினத்தார்).

ரஞ்சிதபோதினி
ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.
சென்னை, ரக்த்தாக்ஷி௵ ஆனி௴
1924௵ ஜூன்௴

பத்திரிகை வாசிப்பதினால் பயனென்ன?

நண்பர்களே !

பாரதபூமியாகிய நம் புண்ணிய பூமி என்று வழங்கப்பட்ட நம் இந்து தேசமானது புராதனக்காலத்திலிருந்து மேன்மையடைந்ததென்று யாவரும் அறிந்த விஷயமே. இப்புண்ணிய பூமியில் தான் அநேக மாகான்கள் அவதறித்து முக்தியடைந்த ஸ்தலமென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஆங்காங்குள்ள க்ஷேத்திரங்களின் மகிமையினாலும் புண்ணிய நதிகளின் விசேஷங்களினாலும் இன்றும் தெரியவருகிறது. இங்ஙனம் பிரபல்ய மடைந்திருந்த நமது புண்ணிய தேசமானது நாளடவில் க்ஷீணித்துப் போகவேண்டிய காரணமென்ன வென்பதை உற்று நோக்குங்கால் நம் தாய்ப்பாஷையாகிய தமிழ்க்கல்வியின்மையினாலேயே க்ஷீணித்து வருகிற தென்று நாம் சந்தேகமறக் கூறலாகும்.

நேயர்களே ! பலதேசங்கள் பத்திரிகையின் அபிவிர்த்தியால் முன்னேற்ற மடைந்திருப்பதை யறிந்திருந்தும் நம் நாட்டாரில் அனேகருக்குப் பத்திரிகாபிமானமாவது அல்லது தம் தேசபாஷாபிமானமாவது சற்றேனுமில்லை. நம் தாய்ப்பாஷையாகிய 'அமிழ்தினுமினிய தமிழ்மொழியானது, பல்லாயிர வருடங்கட்கு முன்னமே உன்னத நிலையிலிருந்த தென்பதும், பூரணமான தென்றும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் போற்றப் பட்டதென்றும், நால்வர்களாகிய (அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்) இவர்களால் பாமாலையாகப் பாடப்பெற்றதும், கம்பன், காளமேகன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, ஔவை, காளிதாசன் முதலான பல கவீஸ்வரர்களால் பலகவிகள் பாடப் பெற்றதும், எலும்புருவாகியிருந்த செட்டிப்பெண்ணை உயிர்பிக்கச்செய்ததும், முதலை யுண்ட பாலனை மீண்டும் கொண்டுவரச்செய்ததும், சூலைநோயால் துன்பமடைந்திருந்த பாண்டியமன்னனை குணப்படுத்தினதும், இலக்கிய இலக்கணங்களில் இணையற்றதென்றும் நன்குவிளங்கியிருந்தும் நம்மவரில் ஆங்கிலங்கற்றவர்களிற் பலர் தம்தேச தாய்ப்பாஷையை யலட்சியம் செய்வதோடு தமிழ்ப்பத்திரிகைகளை வாசிப்பவர்களைக் கண்டால்'' தான் கெட்டவானரம் வனத்தை யெல்லாம் அழித்தது

போல் வீணுக இந்தத் தமிழ்ப்பத்திரிகைகளை ஏன் வாசிக்கிறீர்கள் சார்........." என்று கூறிநம்மவர்களுக்குக் கொஞ்ச நஞ்சமுள்ள பாஷாபிமானத்தையும் கெடுக்க முயல்கிருர்கள். தாய்பாஷையை யலட்சியம் செய்யும் மாதுர்துரோகிகள் தெய்வவழிபாடுக்கும் தேச நன்மைக்கும் உடையவர்களாயிருப்பது அறிதினுமறிதே, அவர்கள் ஆன்மார்த்தத்தை யிழந்தவர்களே யாவர். ஏனெனில் மோக்ஷவீட்டை பெறக்கூடிய மார்க்கத்தைக் கூறும் நூல்கள் நம் தாய்ப்பாஷையில் தான் இருக்கின்றன. இத்தாய்ப்பஷையைத்தான் ஒவ்வொரு புண்ணிய சீலரும் பிறருக்கு எடுத்துணர்ந்து அதை முன்னுக்கு கொண்டுவரவேண்டுமாளுல் நல்ல தமிழ்ப்பத்திரிகைகளே வாங்கி வாசிப்பது தான் முக்கியமானகடமை. ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களும் தவருமல் பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து அதிலுள்ள விஷயங்களை பிறருக்கு எடுத்துரைத்து அவர்களை நல்வழிக்கு கொண்டுவருவது தான் நமது நோக்கமாகும். இதை விடுத்து வீண வாதம் செய்துக்கொண்டுழலும் நண்பர்களே ! யாது பிரயோஜனம்" உங்களின் ஆதரவினுலல்லவோ ஒவ்வொரு பத்திரிகையுமுன்னேற்ற மடையவேண்டுவது யாதெனில் (பணம்) என்னும் வஸ்துவைக் கொண்டே பத்திரிகை நடத்தவேண்டியிருக்க, அதை ஆதரிப்பவர்களில்லாததினுலே அநேக பத்திரிகைகள் முன்னுக்கு வருமல் இருந்தவிடம் தெரியாமலே புல்முளைத்துப்போகிறதென்ருல் தமிழ்ப்பத்திரிகைகளின் ஆதறிப்பைப்பற்றி நாம் வேறு என்ன கூறவேண்டியிருக்கிறது. மேனுட்டில் அன்று சாப்பாட்டுக்கு வழியில்லாவிட்டாலும் முந்தி ஒரு அணு கொடுத்து ஒரு பத்திரிகை வாங்கிவாசித்துவிட்டுத்தான் மற்றக்காரியம் பார்க்கச்செய்வானென்ருல் (மேனுட்டில் பிரசுரமாகும் "டெயிலி எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகைக்கு 4000ப் சந்தாதாரர்கள் இருக்கிருர்களென்ருல் அப்பத்திரிகையின் மேன்மையைப்பற்றியும் அத்தேசத்தின் அபிவிர்த்தியைப்பற்றியும் நாம்கூறுவதென்ன. ஈதரியாமல் நம் தமிழபிமானிகள் நம் பாஷைபத்திரிகையென்ருல் எட்டிக்கசப்பாய் இருக்கிறதே ஒழிய பிரியமுடன் வாங்கி வாசிப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரைக்காணுமென்ருல் நம் நாடு க்ஷீணமடையாமல் முன்னுக்கு வருவதெங்ஙனம். நிற்க நம் ரஞ்சிதனுக்கு சந்தாதாரர்களை சேர்க்கவும், பத்திரிகையை விசாலமாக பரவச் செய்வதற்கும் நமது எடிடரான ஸ்ரீமான் வாசுதேவராவ் கேய்க்வார் அவர்கள் தென்னுட்டுபக்கம் வந்து பல நண்பர்களைக் கண்டு நேரில்கேட்டதில் சிலர் பாம்பைப்போல் சீறினவர்களும், சிலர் பத்திரிகையில்லாதது ஓர் குறைவு என்றும், சிலர் இன்றுவாரும் நாளை வாரும் என்று திருப்பித்திருப்பி காலதாமதம்செய்தவரும், சிலர் சிலர் ஆபீசுக்குநேரே எழுதிவரவழைத்துக் கொள்வதாயும், சிலர் பாம்பின்வாயிலகப்பட்ட தேரையைப்போல் அகப்பட்டுக் கொண்டோமென்று முகஸ்துதிக்காவது ஆர்டர் பாரத்தில் எழுதி கையெ

மூத்து இட்டும், வி. பி. வந்தவுடன் திருப்பி அனுப்பிவைப்பவருமாக விருந்தால் நம் நாடு செழித்து நம் தாய்ப்பாஷை முன்னுக்கு வருவதெக்காலம் அந்தோ ! என்னபரிதாபகரமான விஷயம். தென்னுட்டு பக்கங்களில் பணக்காரபிரபுக்கள் லட்சக்கணக்காகவிருந்தும் தாய்ப்பாஷை பத்திரிகைக்கு தினம் 6 பைசாசெலவழிப்பதென்ருல் மனமில்லாதவர்களாய் முன்பின் யோசிக்கிருர்களென்ருல் இவர்களுக்கு நாம் எடுத்துக்கூறுவது "செவிடன் காதில் சங்கு ஊதினது" போல் ஆகின்றதே ஒழிய நடப்பவரைக்காணேம்.

மித்திரர்களே ! இனிமேலாவது நீங்கள் ஒவ்வொருவரும் நல்ல அறிவு வாய்ந்த தமிழ்ப்பத்திரிகைகளை வரவழைத்து வாசிக்கச் செய்வீர்களானுல், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளருளினுல் நம் நாடு க்ஷேமமடைந்து நம் மித்திரர்கள்யாவரும் சுக க்ஷேமமாகவேயிருப்பார்களென்று நமது கோரிக்கையாகும். சுபம் ! சுபம் !

இங்ஙனம்: எம் சம்பந்த முதலியார்,
பத்திராதிபர்.

சுந்திரமூர்த்திநாயனுர் சரித்திரம்

தென்னுட்டைச்சார்ந்த திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னுமூரில் சடையனுர் என்னும் பிராமணருக்கும் இசைஞானியார் என்னும் அம்மையாருக்கும் ஓர் புத்திரர் பிறந்தார். இவருக்கு நம்பியாரூரர் என்று பெயர். இவர் வனப்பினைக்கண்ட திருமுனைப்பாடி அரசன் நரசிங்கமுனையாரென்பவர் ஆசைகொண்டு பெற்ருேர் உத்திரவுபெற்று சொந்த குழந்தையைப்போல் பாவித்து வளர்த்து வந்தார். இவர்சகலகலைகளிலும் வல்லுணராகி தக்கப்பிராயமடைந்தார் இக்காலை சடையனுர் புத்தூரிலிருக்கும் சடங்கவியார் மகளை மணம் பேசினர். திருமணம் நடக்கும் சமயத்தில், நாகபூஷணன் ஓர்வயோதிக வேதியராக அங்குவந்த எல்லோருடைய முன்னிலையில்இந்தநம்பியாரைப் பார்த்து "உமக்கும் எமக்கும் ஓர் வழக்குளது அதை முடித்தபின்னரே மணம் செய்துக்கொள்ளவேண்டும்" என இதைக் கேள்வியுற்றமணமகன் அவ்வழக்கை தீர்த்த பின்னரே விவாகஞ் செய்துக்கொள்வேன், அவ்வழக்குயாதென, ஐயர் நீர் எனக்கு அடியவன் என்று சொல்ல, அதைக்கேட்டு நம்பியாரூரார் நீ பித்தனே என்று சொல்லி பரிகசிக்க, வயோதிகர் அவரையன்றி அக்காலத்தில் உன் பாட்டன் எழுதித்தந்த அடிமையோலை இது நீ பரிகசிப்பது தகாது அடிமைவேலை செய்யவா என்று கூப்பிட பிராம்மணர் பிராமணருக்கு அடிமையாதல் நீர் இன்று சொல்லிதான் தெரியவந்தது. அவ்வடிமை ஓலையைக் காண்பிக்கும்படி கேட்க, பெரியவர் ஓலையின் மூலமாய் உண்மையென்று தெரிந்தபின் எனக்கு நீ அடிமையாகவேண்டுமென, மணமகன் வெகுண்டு ஓலையைப்பறிக்க ஆரம்பிக்கையில் ஐயர் ஓட இவரும் ஓடி அதை பிடுங்கி கிழித்து எரிந்து விட்

டார். இதைக்கண்ட ஐயர் ஓலமிட்டழ அங்கிருந்த பிராமணர்கள் தீர்மானப்படி, வயோதிகர் சொந்த ஊராகிய திருவெண்ணைநல்லூருக்குச் சென்று அநேகர் முன்னிலையில் குறையை முறையிட்டார். ஆங்கிருந்தவர்கள் நம்பியாரூரரைப் பார்த்து நீர் உமது பாட்டனுர் எழுந்திதந்த அடிமை ஓலையை கிழித்தீரே உமது சார்பாக ஜெயங் கிடைக்குமா என்ன சொல்லுகிறீர் என்று கேட்க, அதற்கு சுந்தரர் இது மாயை என்றே சொல்லவேண்டும், எனக்கு யாதும் புலனுகவில்லை என்று விடைபகர்ந்தார். அங்கிருந்த மறையவர்கள் பெரியாரை நோக்கி உமது வழக்கை எங்களது முன்னிலையில் தக்க ஆதாரத்தோடு மெய்ப்பிக்கவேண்டும் என வயோதிகர் மூல ஓலை என்னிடமிருக்கிறது அதையுங்கிழிபடாமல் காப்பீரேல் அதை காண்பிக்கிறேனென, அவர்கள் அதற்கிணங்க, ஐயர் ஓலையைக் காண்பித்தார். அதுபின்வருமாறு எழுதியிருந்தது. " திருநாவலூரிலிருக்கின்ற ஆதிசைவனுகிய ஆரூரன் என்ற நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு நானும் என்மரபினேரும் தொண்டுசெய்வதற்கு உடன் பட்டுளோம். இப்படிக்கு ஆரூரன் " சாக்ஷிகள் கையெழுத்தும், முன்பாட்டனுர் எழுதின சொந்தகையெழுத்தும் ஒத்துப்பார்த்ததில் சரியாகவே இருக்கக்கண்டு சுந்தரரைப்பார்த்து நீர் என்ன செய்யப்போகிறீர் என்று கேட்க " விதி அப்படியாயின் உடன் படுவதே மேல் " என்று விடையளித்தார்.

பின்பு மறையவர்கள் வயோதிகரைப்பார்த்து தங்களிருப்பிடம் இதுவே என்று எழுதி இருப்பதினுல் உமது இல்லம் எங்கிருக்கென, ஐயர் காண்பிப்பதாகச் சொல்லி முன்னே நடக்க, பின்னே இவர்களும் சுந்தரரும் தொடர்ந்து போனுர்கள். ஐயர் திருவருட்டுறை என்னும் ஆலயத்துட் பிரவேசிக்க அவர்களும் தொடர ஆரம்பித்தார்கள். அங்கு ஐயரைக்காணுது திகைத்து நிற்க, சுந்திரருக்கு மாத்திரம் பரமசிவன் உமையோடு ரிடபவாகன ரூடராய் வெளிப்பட்டு காட்சிதந்து தொண்டனே! உன். வேண்டுகோட்படி இப்போது உன்னை சமுசார சாகரத்தில் உழன்று வருந்தாதிருக்க ஆட்கொண்டோம் என்றருளி நம்மை புகழ்ந்து பாடுக என்று உத்திரவிட்டு, அவர் வேண்டுகோட்படி " பித்தாய் நீ நம்மை முன்பித்தனே என்று கூப்பிட்டீரே " அதையே முதலடியாகவைத்துப்பாடுகஎன்று சொல்ல, நம்பியாரும் " பித்தாய் பிறைசூடி" என்னும் பாடலைப்பாடி துதித்து நின்றுர்.

நிற்க, புத்தூரிலிருக்கும் சடங்கவியார் மகள் சுந்தரர்மேலேயே தியானங்கொண்டு சிவலோகத்தை யடைந்தாள். பின் சுந்தரர் திருநாவலூர் திருத்துறையூருக்குச்சென்று சுவாமி தரிசனஞ்செய்து அங்கிருந்து சிதம்பரம்போக நினைத்து, பெண்ணையாற்றைக்கடந்து திருவதிகையின் எல்லையை அடைந்து திருநாவுக்கரசு சுவாமிக்கு

கைத்தொண்டு செய்த இந்த தலத்தை காலால்மிதிக்க அஞ்சி, உள் ளேபோகாது சமீபத்திலிருந்த சிவமடத்தில் வீரட்டானேஸ்வரரைத் துதித்துக்கொண்டு நித்திரைப்போனர். அப்போது வீரட்டானேஸ் வரர் வயோதிக பிராமணனாக அங்கு வந்து நம்பியார் சிரசின்மீது பாதங்களை வைத்து நித்திரை செய்பவர்போலப் பாவனைக்காட்டினர். இதையறிந்த நாயனர் ஏன் இவ்வாறு செய்தீர் என்று வினவ, வயோதிகர் எனது மூப்பின் மிகுதியாய் அறியாது செய்து விட்டேன் என்று விடைபகர நாயனர் மற்றொரு விடத்தில் நித்திரைப்போக அங்கும் அவ்வாறே மூதியவர் செய்ய, சுந்தரர் என்னை மிதித்த, நீர் யார் என்று சினத்தோடு கேட்க, "என்னையறியாயா!" என்று சொல்லி மறைந்தார். இதையறிந்த நாயனர் தன்னைமிதித்தவர் கடவுள் என்று அறிந்து தன் இறுமாப்பைப் பற்றி இகழ்ந்து வீரட்டானேஸ்வரர்மீது பாமாலை சூடினர்.

பின்பு திருவதிகைத்தென்புறமிருக்கும் கெடிலநதியில் நீராடி திருமணிக்குழி, திருத்தினைநகரம், சிதம்பரம் முதலிய சிவஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு, கொள்ளிடந்தாண்டி, சீர்காழியை அண்டினர் அங்கு திருஞானசம்பந்தர் அவதரித்தத்திருப்பதியை மிதிக்கலாகா தென்றுன்னி புறவெல்லையை வணங்க, சிவபிரான் காட்சி தந்தார். பின்பு திருக்கோவலக்கா, திருப்பங்கூர் முதலிய தலங்களை தரிசித்துக்கொண்டு, காவேரி நதியில் தீர்த்தமாடி மாயூரம், அம்பர்மாகாணம் திருப்புகலூர் முதலான சிவ க்ஷேத்திரங்களை வணங்கிக் கொண்டு வன்மீகநாதர் முனைப்படி தொண்டர்கள் எதிர் கொண்டழைக்க, திருவாரூரையடைந்தார். அவ்வமயம் பார்வதி சேடியர் களில் ஒருவளாகிய கமலினி திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து, பரவையார் என்னும் பெயரோடு, நாடோறும் சுவாமி தரிசனஞ் செய்து போவாள். அவ்வாறு ஒரு நாள் அம்மாது சுவாமி தரிசனத்திற்கு வந்தகாலை நாயனர் கண்டு காமுற்றார். அவளும் நாயனரைக்கண்டு காமுற்று, தன் வீடேகி வருந்திக்கொண்டிருந்தாள். நாயனா ஆயிரக்கால் மண்டபத்தையடைந்து, பரவை

---

* ஸ்ரீ கைலாசபதியான சிவபெருமானுக்குத்தொண்டுசெய்பவர் களில் ஆலால சுந்திரர் ஒருவராவர் ஒரு நாள் ஆலாலசுந்தரர் கண்ணுதர்கடவுளின் நிமித்தம் மலர் கொய்ய நந்தவனமேகினர். ஆண்டு உமையாளின்பொருட்டு, அணிந்ததை கமலினி என்று மிருசேடியர் கள் மலர்கொய்து கொண்டிருக்கக்கண்ட சுந்தரர் அவர்கள் மேல் காமுற்று நிற்க, அவர்களும் இவர்மீது காமுற பின்னர் ஒருவாறு தேறி தத்தம் இருப்பிடத்தை யடைந்தனர். இதையறிந்த திருநீலகண்டன் இவரை மானிடதேகமெடுத்து அம்மாதர்களோடுகூடிவாழ்வாய் என சாபமிட சுந்திரர் அஞ்சி; தேவரீரை விட்டுப் பிரிந்து மானிடனுகவேண்டும்'' என்று இரங்கி நிற்க, சிவனும் அதற்கிசைந்தார்.

யாரை கலியாணஞ்செய்து வைக்கும்படி வான்மீகநாதரைத்துதிக்க. கடவுள் அடியார்களிடஞ் சென்று நாயனருக்கும், பரவையாருக்கு மணஞ்செய்துவைக்குமாறு சொல்ல, பரவையாருக்கும், நாயனருக்கும் அதைச்சொல்லி மறைந்தார். மறுநாள் கடவுள் ஆணைப்படி இருவருக்கும்மணம் முடிந்தது. (தொடரும்)

எஸ். என். இராமு,
கூறைநாடு.

பார்த்திபசிவபக்தி

(130 ம் பக்கத் தொடர்ச்சி.)

அர்ச்சுனன்:—(கோபத்துடன்) அடே! கிராதகப்பதர்களே என்ன நீங்களும் ஒரு வில்லாளியா? பன்றியை நெடும் தூரத்திலிருந்து துரத்திக்கொண்டுவந்தேன் என்று நாணமில்லாமலும் கூசாமலும் சொல்லுகின்றீர்கள் ஒரு வில்லாளியானவன் தான் நின்ற இடத்திலேயே குறிவைத்து கணைதொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் பன்றியைத் துரத்திக்கொண்டு, இவ்விடத்தில் கணைதொடுத்து வீழ்த்தினேன் என்று கொஞ்சமும் லஜ்ஜையில்லாமல் சொல்லுகின்றீர்கள். நான் வேறு ஒரு காரியத்தை என் கவனமுழுமையும் செலுத்திக்கொண்டு இருப்பதால் நான் உங்களை எதிர்க்கமுடியவில்லை நீங்களும் ஒரு வில்லாளியைப்போல் கையில் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டு இருக்கிறீர்கள். என்முன் நில்லாதீர்கள். போங்கள்! சீக்கிரம் நீங்கள் வீழ்த்திய பன்றியையும் எடுத்துக்கொண்டு உடனே இந்த இடத்தைவிட்டு ஓடி விடுங்கள்.

இத்தனை சம்பாஷணைகளையும் சாந்தமாய்க் கேட்டுக்கொண்டு நின்றவேடர் தலைவ[illegible] சிவபிரான் பின் வருமாறு சொல்லுகிறார்:—

"ஏ. அர்ச்சுன. உன்னை நான் நன்றாய் அறிவேன் நீ உன்னுடைய வில்வித்தையின் சாமார்த்தியத்தால் இறுமாப்பும், கர்வமும் கொண்டு இருக்கி[illegible] முன் துரியோதனன் தம்பி துர்ச்சாதனன் உங்கள் ஐவருடைய மனைவியாகிய துரோபதையை மானபங்கம் செய்தபொழுது நீயேன் உன் வில்வித்தையை காண்பிக்கவில்லை நீ என் திடும்பிரவேசமாய் நின்றாய். நீ ஒரு வில்லாளியாய் இருந்தால் நீ என்ன செய்யவேண்டும் உடனே வில்வளைத்து ஒருகணைதொடுத்து துர்ச்சாதனை கொன்று இருக்கவேண்டும் தவிர நீங்கள் ஐவரும் சாஸ்திரோத்தமாய் பிறந்தவரல்லர் உன் பிதாவுக்கு தன்மனைவிகளுடன் கூடி இருந்தால் தலை ஆயிரம் சுக்கலாக உடையக்கடவது என்று ஓர் சாபம் உண்டு ஆகையினலே உங்களுடைய பிதா தவம்

பூண்டு. தன் இருமனைவியர்கள் உபசாரம் செய்ய காட்டில் வசித்து வந்தார் உங்களுடைய தாயார் ஒரு பெரிய மகரிஷியினுடைய வரப் பிரசாதம்பெற்றாள், அந்த வரப்பிரசாதத்தின்படி. நீங்கள் அவதரித் தீர்கள் தவிர உன்னை கொல்லவேண்டும் என்று எனக்கு—நெடுநா ளாக ஒரு ஆசையுண்டு. அதற்கு காரணங்கள் அநேகம் உள அவை களில் முக்கியமானது இதுவே "முன் எங்கள் குலத்தில் உதித்த ஏகலைவன் என்னும் ஓர் வேடுவ அரசிளங்குமரன் உங்களுடைய குருவான துரோணாசாரியிடம் வந்து தனக்கும் வில்வித்தை கற்பிக்க வேண்டும் என்று வேண்ட அதற்கு அவர் தமக்கு ஒழிவுகிடையாது என்று சொல்லி விடவே, அவன் ஏகலைவன் துரோணருடைய அங்க அடையாளங்களை நன்றாய் தனது மனதில் பதியவைத்துக்கொண்டு, துரோணரை வணங்கி விட்டு, தன் இல்லம் சென்று அவரைப்போல ஒரு உருவம் செய்து வைத்து அந்தீ ஒரு குருபக்தி என்னும்படி யான ஒரு விசேஷத்தால் வில்வித்தை நன்றாய் கற்றுக்கொண்டு வரும் நாளில் நீ ஒரு சமயம் அம்மார்க்கமாய் போக உன்னுடைய நாயா னது துரோணருடைய உருவம் இருக்கும் இடத்திற்கு வந்து நீர் விடவே அதை தற்சயலாய்ப்பார்த்த ஏகலைவன் அது சகியாதவனாய் அந்த நாயின்மேல் ஒரு பாணம் விட அந்தபாணமானது மிகஅற்புத மாய் அந்நாயின் மேல் பாய்ந்தது. உடனே அந்தநாய் உன்னண்டை யில் வந்து அழுதது. நீ தாயுடன் இதை கொன்றவன் யார் என்று அறிய ஏகலைவன் வீட்டுக்குப் போனாய் உன்னைக்கண்ட அவன் உன்னை உபசரித்தான் நீ அவனை நாயின்மேல் பாணம் தொடுத்த கா ரணத்தை கேட்க அவன் காரணம் சொன்னான் பிறகு நீ வில்வித்தை எப்படி கற்றுக்கொண்டாய் என கேட்கவே அவன்நடந்ததைச்சொல்ல உடனே நீ அந்த இடத்தை விட்டுச்சென்று துரோணரிடம் சென்று சங்கதிதெரிவிக்கவே அவர் உன்னோடு ஏகலைவன் வீட்டுக்குச் சென் றார். குருவானவர் தமது இல்லத்திற்கு வருவதைப் பார்த்து ஏ கலைவன் எதிர்கொண்டுபோய் அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி அவரைவணங்கின பிறகு தாங்கள் தயார் என்றும் உங்களால் தான் வில்வித்தைபயின்றேன் என்று ஏகலைவனுடைய பெருவிரலை காணிக் கையாய் கேட்க உன்னுடைய குருவுக்கு உபதேசம் செய்ய அவர் உன்னுடைய துர்போதனைக்கு உடன் பட்டு பெருவிரலை காணிக்கை யாய் கேட்கவே ஏகலைவன் சற்றும் யோசியாமல் பெருவிரலை அறுத்து காணிக்கையாக கொடுத்து சிறிது காலம் சென்றதும் மாண்பின் ஆசையால் ஏ அர்ச்சுனா! உன்னுடைய சொல்லினால் குரு பக்தியுள்ள ஏகலைவன் மாண்டான்; இது மட்டுமா. இன்னும் அநேக வேடுவர்களை பூண்டோடு நாசம் செய்திருக்கிறாய். (தொடரும்.)

B. S. வெங்கட்ராமன்.

கோயமுத்தூர்.

ஆன்மாவே புத்திரன்

அல்லது

உயிரே மக்களாவர்

(131 ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆவது தானுகும், வருவது தான் வரும்! போவ
தெல்லாம் போகத் தான் போகும் நம் செய
லாலாவ தொன்றுமேயில்லை.

"சீலமுந் தருமமுஞ்சிதைவில் செய்கையும்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுங்கங்கிப
மூலமும் வந்து தவிய மூவர்க்காயினும்
காலமென்றொருவலை கடக்கலாகுமோ?

வநவாஸசம் கஷ்டமாயிருக்கிறதென்றெண்ணினல் முடியுமோ ஸ்வாமி பட்டாபிராமனைப் லீலா லோல உல்லாஸம் பொருந்தி அயோத்திபிலிருந்துவிட்டால் துஷ்ட நிக்ரஹ எவ்வாறு நம். காலங் கண்டு தூண்டுதற்கன்றோ வானவரால் மந்தரை யனுப்பப்பட்டனள். வீணில மந்தரை (கூனி) யின் மேல் பழிச்சொல் சொல்வதினல் பய னென்னே? அல்லது உத்தமிகைகேயிதான் என் செய்கிற்பாள்? கை கேயி இதற்கென்றேறபடா திருந்தால், தேவகாரியம் நிகழ்வ தெங்ஙனங்கூடும்? பொருளில நிராசை கொண்ட பரதனுடைய தன்மையைத்தான் உலகமறிந்து புகழ்வதெப்படி? ராமாயண கதாநாயகரின் சகோதர வாத்ஸல்யத்தை என்னென்பது! இக்காலத்தில் பொருளாசை யினலேயே ஒருவரை யொருவர் சந்திசிரிக்குமாறு அடித்துக் கொள்ளுகின்றனரே! த்வாபரத்தில பாண்டவரைவரும் கூடி ஏகோபித்து உயிருக்குயிராயிருந்தாலும, துர்யோதனதி நூற்றுவரில் விகர்ணன் நீங்கலாப் கர்ணனுள்பட பொருண்மை கொண்டொழுகினர், என்னவானுர்கள்? போரினில் வீழ்ந்து மடிந்தனர். ... பூட்டிய விபீஷணன் சொற்கேளாததால் ராவணன் சமரில் ... படிந்தனன் விபீஷணனே அநம்பதவி பெற்றனர். கா... யுதிஷ்டரனும் கடைசியில் ஒருவரை யொருவர் தெரிந்து மனம்புழுங்கினராயினர். ஏவம் விதம் கலியின்கொடுமை த்வாபரத்திலே தொடங்கிற்று.

, இப்பொழுது கலிபுருஷன் தன் முழு வல்லமையைக்காட்டிக் கொண்டிருக்கின்முன். மேனுட்டார் நடையுடை பாவனைகள் நிறந்து மிகுந்தது. நம்மவர் மயங்கினர். மதக்கோட்பாடுகள் குல தருமவழக்க வொழுக்கங்களெல்லாம் நழுவிக் கொண்டிருக்கின்றன, எங்கு நோக்கினும் குடி, பெருத்ததுதான மிச்சமாயிற்று; புகையிலை மென்று துப்புதல் வலுத்தது; சிகரட் புகை நாற்றம் வேறு; இவைகளே இக்காலத்தில முறைப்ப சந்தியாவந்தனம், ஔபாசனம். அக்னிஹோத்ரமுமாம். இவ்வித ஒழுக்கங்களைக்கண்டு விண்ணவர்

மகிழ்ந்து ஏன் மழை பொழியலாகாதோ! எரி பொழிதலே நாம் எங்குங் காண்கின்றோம். ஜப்பானில் சில பாகமழிந்தது எரியினாலன்றோ!

பிதாவிற் கடங்காத பிள்ளையும். பிள்ளைக்கேலாத்தகப்பனும், சச்சரவும் பொருண்மையுமுள்ள துணைவர்களும், பதிக்கடங்காத சதியும், சீர் கேடுற்று தலைகீழ் பட்டு, கீழோர் அதிகப்பிரசங்கம் செய்வதும், மேலோர் சம்மான மழியாமல் காத்துக் கொள்ளும் பொருட்டு பிரகிருத சிறுவர்களைக்கண்டு குனிதலுமாய் ஏற்பட்டு விட்டதிக்காலம். வீணில் வருந்தியாவதென்ன?

வெண்ணிலாக்கால மின்பம் பெருக்குதலும், நன்னிருட்காலந் துன்பம் பயக்குதலுமாப்போல் இன்பதுன்பங்களைச் சமமாய்க் கடவுள் வகுத்திருக்கின்றனர். இந்த தேகம் விழுந்து போவதினால் மனிதனும் அழிந்ததாய் விடுகின்றானெனப்புகலுவது சுத்தமதியீனமேயாகும். நிஜமனிதன் இந்த சரீரமேயல்ல, காற்றுமல்ல, ஆனால் பரமாத்மாவின் அம்ச ஸ்வபாவமாம் ஜீவனே "தேஹோ தேவாலய ப்ரோக்த: ஸஜீவ: கேவல: சிவ: என்பதே ச்ருதி வாக்கியமாம். இந்த தேகத்தை தேவாலயமென்றும், அதற்குள்ளிருக்கு ஜீவனை சிவனென்றும் மைத்திரேய பநிஷத் கூறுகின்றதே! இந்த ஜீவன் தேகத்திற்குள் பூங்காட்டிவைக்காலும் சரீர ஸம்மந்தப்பட்டதல்லவொன்றே தத்வமுணர்ந்த ஞானிகள் தத்தம் ஸ்வானுபவத்திலிருந்து கண்டனுபவித்து நமக்கு போதிக்கின்றனர். இந்த தத்வத்தை யொப்புக் கொள்ளவேண்டியிருக்கிறதென்றே நவீன டாக்டர் (தன்வந்த்ரி)களும் பரீக்ஷைசெய்து பார்த்துக் கூறியுள்ள வசனங்களிலிருந்து 'ஹெல்த்' (Health) என்ற வைத்திய சாஸ்த்ரீயப்பத்திரிகையில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

நமது இந்து தேசத்தின்கண் ஹடயோகிகள் தேகமே ஆன்மாவென்கிற தப்பெண்ணம் படைத்தவர்களாய் அந்தத்தப்பெண்ணத்தை நற்போதனையினாலும் நழுவ விடுவதற்கில்லாமல் குருமுகமாய்க்கூட அனேகவிதமான பிரயத்தனங்களைச் செய்து மயக்க முறும்படியான வஸ்துக்களைத்தின்று அப்போதுறும் போதையில் தேகம் ஜடமாய்க் கிடந்தாலும் உள்ளூர ஓர் வித ஆனந்தம் ஜனிக்கின்றதைக்கொண்டு ஆன்மா தேகஸம்மந்தப்பட்டதன்றெனும் த்ருட ஞானம் பெற வீண் ப்ரயத்தனப்பட்டு வீணர்களாகின்றனர். அத்தகையோர்களைப் போலவே நமது அவ்வைமாம்பையனும் அவலச்சமர்த்தை மேற்கொண்டு கடையத்தான் மருந்தின் மயக்கினில் வீழ்ந்து பேற்கூறிய சொக்குப் பொடியாதிகளால் நன்மயக்குற்று எக்கையசையும் எஞ்சிய தங்கையையும் எனையரையும்—ஏன்! தன்னையே—மறந்து கண்டவாறு மதியீனப் பேதையர்களிடம் நின்று தடயாட்டங்கொண்டு திரியலாயினனே! ஹா! என் செய்கிற்பேன்! கடவுளே! ராமச்சந்ரா சர

ணம் ! சரணம் ! நீதான் பேதைப்பையனை நன்மதியூட்டி நல்வழியிற் திருப்பி, வீடு கொண்டு வந்து சேர்த்து, குடும்பபோததாரணம் பண்ணிவைக்கவேண்டும். கருணாநிதியென்ற பெயர் படைத்தனை யே !

நவீன வேஷதாரிகளைக்கண்டாலே நம்மவர்கள்—பழைய வழக்க வொழுக்கங்களைப்பற்றியொழுதகிறவர்கள்-வேண்டா வெறுப்பாயப் பழித்துப் பல்லிளிக்கின்றார்களே ! இந்த நமது பையனால் நமது மூனறு (ஜனன, ஸ்விகருத, மாத்ரு) குலஙகளும், என்றும, நீங்கா விழிவும், தலை குனிவுமாய், பையன செய்த சூழ்ச்சிகளினால் பைபன மயஙகி மேபமானியாய்த்திரியவும் ஏற்பட்டு விட்டதே. ஐயோ என் செய்கிற்பேன் ! இப்பேற்பட்ட அவமானங்களையும் அபகீர்த்திகளை யும் சம்பாதித்துக்கொண்ட நம்முடைய வாழ்வுமோர் வாழ்வாகு மோ ! பிள்ளையை உயிருடன் பரிகொடுத்தும், புத்ர சோகத்தனால் தசரதரைப்போல, ஏன் என் உயிர் போகாமல் இன்னும் தனித்துக் கொண்டிருக்கின்றது. அறியாத சிறுவனை வழி, துறை, மதி தெரி யாத பிள்ளையை சரி (நெறி) யான வழியைச் சார்ந்தொழுகுமாறு நன்மதியூட்டியனுப்புவோரில்லையோ இவ்வுலகினில் ! ஆக்ரா (Agra) டாஜ் (Taj) முதலான வற்றைக் கண்டு வியந்தும் கெங்கை யமுனை முதலிய நன்னீராடி பாவன மானதே பூர்வ புண்ணியமென்றறி வுறுத்திய மகானுபாவன் வாக்களித்தபடி திருமபவீடு கொணர்ந்து சேர்த்த பாடில்லாமல் தம் வழியே நோக்கிச் சென்றனராயினர். இனி ராமச்சந்திரனையன்றி வேறுகதியில்லை, யில்லை ! ராவணனைச் சமூலமாயழித்து சீதை யச் சிறையினின்றும் விடுவித்துக் காத்த வாறு அரிய சிறிய பேதைப்பையனைக் கெடுத்த மகாபாவிகளை நிகர ஹம்பண்ணி விடுவித்தாலன்றி வேறு கதியில்லை என்று ஸதா ஸர்வ காலமும் மனஞ்சாபித்தவிக்கலாயினர் அந்தணப்பெருமான்.

(தொடரும்.)

துறையூர், சுப்பராமய்யர்.

சூது

" வேண்டிற்க வென்றிடினுஞ் சூதினை வென்ற தூஉந்
தூண்டிற் பொன் மீன விழுங்கியற்று " (திருக்குறள்)

சூதாவது கவறு சதுரங்க முதலியவற்றால் ஆடுதல் சூதுதருமமும், பொருளும் இன்பமுமாகிய மூன்றுசகும் இடையூறுயுள்ளது சூதாட்டத்தில் வென்ற பெரும்பொருளானது, இறை என்றும மீன் விழுங்கிய தூண்டின் முள்ளைபோலச் சூதாடுவோர் நீங்காமைககு இட்ட ஒரு தளையாகிய மற்றத் தொழில்களை யெல்லாம் கெடுத்துப் பின்பு துன்பத்தை தருகின்றது. ஆதலால், ஒருவன் தனக்கு சூதா டுதலில் வெல்லவல்லமையிருந்தாலும், சூதாடலாகாது. சூதாடுவோர் ஒன்றைமுன் பெற்று, இன்னும் வெல்லுவோமென்னும் கருத்தா

மறுபடியும் ஆடி நூற்றை இழப்பர் (2-ம்) பாண்டவர்களையும் நள மகாராஜனையும் எடுத்துக்கொள்வோம்- பாண்டவர்கள் விளையாட்டுக்காகிலும் துரியோதனாதியர்களால் சூதுக்கு அழைக்கப்பட்டு கடைசியில் நாடு நகரம் எல்லாவற்றையும் இழந்துவிட்டு, பின் காடடையும்படிநேரிட்டது- இப்படி தர்மத்தினின்றும் தவறாதபாண்டவர்களை காட்டை நோக்கி செல்லும்படி அனுப்பியது இக்கொடிய சூதே இதேபோல நளமகாராஜனும் சூதினால் தன்னுடைய நாடு நகரம் எல்லாவற்றையும் புஷ்கரனிடம் தோற்றுவிட்டு தன்மனைவியும் காடுசெல்லும்படி நேர்ந்தது. இதுவும் அக்கொடிய சூதின் செயலே சூதானது; எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருக்கும் காற்றாடி போன்றது. சூதாடுபவர்களுடைய பொருள் சூதாட்டத்திலேயே அழிந்து வருவதாய் அப்பொருளினால் அடையத்தக்கதருமமும் இன்பமும் அவருக்கில்லை செல்வத்தைக் கொடுத்து வறுமையைக் கொடுத்தற்றொழிலிலே தவறாமையால். சூதை மூதேவி என்பர் அறிவுடையோர்.

"கவறுங்கழகமுங் கையுந்தருக்கி
யிவறியாரில்லாகியார்" (திருக்குறள்)

சூதையும், சூதாடுமிடத்தையும், சூதாடும் தொழிலையும் கைவிடாது செல்லும் பொருள் இருந்தும இல்லாதவராகவே கருதப்படுவார்.

சூதாட்டத்தை விரும்பினவர் வெல்லினும், தோற்பினும் ஒருபொழுதும் அச்சூதைவிடாது தங்காலத்தையும், கருத்தையும் அதிலேதான் போக்குவார். ஆதலால், ஒளியும், கல்வியும், செல்வமும் போஜனமும், உடையுமாகிய ஐந்தும் அவரை அடையாவாம்.

"பொருள் கொடுத்துப்போம் மேற் கொளீஇயருள் கெடுத்
தல்லுழப்பிக் குஞ்சூது" (திருக்குறள்)

சூதாட்டமானது பொருளைக்கொடுத்து பொய்ய மேற்கொள்ளப் பண்ணி, பகையை விளைவித்தலால் மனதில் எழுகிற அருளைக் கெடுத்து இவ்வழியால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிலுந் துன்பத்தைமே அடைவிக்கும்.

"காதல், கவருடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
தல், மறுததல் இவை கண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி" (நளவெண்பா.)

என்று புகழேந்தி தன்னுடைய பெருவாக்கால் சூது மிகவும கொடிய தொழிலுக்கு இருப்பிடமாயிருக்கிற இச் சூதாட்டத்தைக் கண்ணெடுத்துப பாராது அவற்றை ஒவ்வொருவரும நீக்கமுயலவேண்டும் இவ்வாறே சகோதர சகோதரிகள நடந்து பலனடைவார்கள் என்று பரிபூரணானந்த ஒளியைப் பிராத்திக்கினறனம். தமிழபிமானி.

K சாமிநாதன். இரத்தின விலாசம் இளசைநகர்.

ராமச்சந்திரன் காளுேக்கிச் செல்வத்தைப்பற்றி நிகழ்ந்த ஆக்ஷேபனை

ஸமாதானங்கள்

அல்லது

பகவத்கீதோபதேசம்

[ஸ்ரீமத் வான்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டம் 19 முதல் 24வது ஸர்க்கமுடியவிருக்கும் ஸாராம்சத்தை நமது சிற்றறிவிற்கெட்டியமட்டில் சிறுமி சிறவர்கட்கு ஸுபோதமாயிருக்குமென கருதி இங்ஙனம் நமது ரஞ்சிதன வாயிலாய்க் கூறலாயிற்று]

கைகேயிதேவியாரின் வரப்ரதான ப்ரயோஜனமா யேற்பட்ட வனவாஸ நியமனத்தைப் பரம நியம மாகவே தம்முடைய அவதார பிரயோஜன வென்று ராமச்சந்திரன் கருதினர்.

சூரிய பகவான் ராக்காலத்தில் தன பிரகாசம் பயன்படும் வண்ணம் செய்ய முடியவில்லை. சந்திரனுடைய காந்தி ராக்காலத்தில் மங்கலுருது பிரகாசிப்பதுபோல், ராஜ்யமிழந்து வனம் போக நேரிட்டதினுல் ராமச்சந்திரனுடைய தேஜஸ் கெடவில்லை நாட்டை விட்டு காட்டிற்குப் போகிறோமே என்கிற மனோவிகாரமே ராமச்சந்திரனுக்கு உண்டாகவில்லை ஜீவன் முக்தரும் பரமயோகி யொருவன் சுகதுக்கமென்பதேயில்லாமல் விளங்குந்தன்மைபோல தாசரதியானவர் வனஞ் செல்ல நேர்ந்ததை ஸுமுகராயும் ஸுப்ரசன்னராயுமிருந்து ஏற்றுக்கொண்டனர்.

அப்பொழுது தன் தாயாரைப்பார்க்கும்படி கைகேயியின் அந்தப் புரத்தை விடுத்து வெளியேகிப் போந்த காலையில் இளவரசனென்ற மரியாதைக்காக வழக்கப்படி நிகழ்வதற்கிருந்த ஸ்வேதச்சத்ரசாமராதி ஊதியங்களை ராமர் நிராகரித்து விட்டனர். தமமுடைய பிதாவின் முன்னிலையிலும், மாதாவான கைகேயிதேவியாரின் முன்னிலையிலும் தம்மால் செய்யப்பட்ட பிரதிஞ்ஞையை நிறைவேற்றும் பொருட்டு ராஜாங்க மரியாதைகளை அப்பொழுதே வேண்டாமென்று வெறுத்துத் தள்ளினர். ஆனல், ரகுநாதனுக்கு மனதிற்குள் சிறிது துக்கமுண்டு, ஏனெனில் தாம் வனமேகும் சமாசாரம்பாவி தமது ஜனங்கள் துக்கப்படுவார்களே யென்ற வருத்தமே யொழிய ஸ்வகியமாய் (உண்மையில்) அவருக்கு துக்க மென்பது கிஞ்சிற்றும் இல்லவேயில்லை.

ஸுமந்தரனுலழைக்கப்பட்டு மகாராஜாவின் அந்தபுரம்போகும் போது எப்படி பகவான் விகஸித (ஸுப்ரஸன்ன) வதனத்துடன் விளங்கிக்கொண்டிருந்தனரோ அப்படியே, கைகேயியின் அந்தப்

புரம் விட்டு வெளிப்போந்த காலத்திலும் ஜ்வலிக்கும்படியானசூர்ய காந்தியைப் போல் ஜாஜ்வல்யமான முகவிலாஸத்துடன் விளங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் ராமர் வனஞ்செல்லும் விஷயம் ஜனங் கட்குத் தெரியாது—தம் மாதாவினிடத்திலும் பிரியநாயகியும் ஜனக குலசுந்தரியுமான சீதையினிடத்திலும் வனவாஸ விஷயம் தெரியப் படுத்திவிட்டு, தாம் அரண்மனை விட்டு வெளியேகும் வரையில் தமக் குத் திடீரென்றேற்பட்ட வனவாஸ விஷயம் ரகஸ்யமாகவே யிருக்க வேண்டிய நிமித்தியமாய்த் தம்முடைய ராஜச்சின்னமான அலங்கா ரத்தைக் கலைக்காமல் வந்தனர். அப்பொழுது அவர் சரத்காலச் சந்திரகாந்திக் கொப்பாய் விளங்கிக்கொண்டிருந்தனர் அவர் ஸத்வ குணபிரதான பரம புருஷரானதால் தம்முடன் பிறந்ததாயுள்ள ஆனந்தத்தை இழந்தனரில்லை. அன்றியும் அவர் ஸச்சிதானந்த ஸ்வரூபராகலின், நித்யானந்தராய் விளங்கினர். ஆனால் இந்த விஷ யம் தெரிந்த லக்ஷ்மண ஸ்வாமிக்குமட்டில் அவித்யா வியாபாரத்தி னால் கோபமுந்துக்கமும் த்வந்தித்துக் கொண்டு உண்டாகாமலிருக்க முடியவில்லை.

ராமச்சந்திரனுடைய பிரிவை யாற்றமாட்டாமல் அந்தப்புரஸ்தி ரீகளெல்லாரும் மனமிகவருந்தியழுதனர். அவர்களுடைய ரோத னத்தைக்கேட்ட மகாராஜனே சகிக்கொணாத் துனபத்திலாழ்ந்து வெட்கி முக்காடிட்டுக்கொண்டு தாமிருக்குமிடம் தெரியாமல் மறைந் திருப்பதுங்கினர். ஸ்வகீயமாய் ராமருக்கு துக்கலேசமுமில்லா விட் டாலும் மற்றவர்களின் துக்கத்தைக்கண்டு பொறாத உத்தம குணம் படைத்த மகானுபாவனாதலால், தம் சாபத்நி மாதாக்களடைந்த துக்கத்தையும் தீனமான அழு குரலோசையையுங் கேட்டு, யானை யைப் போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு தம் துணைவனும் லக்ஷ்ம ணருடன் கௌசல்யாதேவியாரின் அந்தப்புரம்புக்கி, அங்கு பட்டா பிஷேகாத் பூர்வமாய் நிகழ்ந்து கொண்டிருந்த விரதாத்யனுஷ்டான பூஜை முதலானதுகளை பார்த்துக்கொண்டே சென்றனர்.

கௌசல்யாதேவியாரின் அரண்மனைக்குள் செல்லும் ராமச்சந் திரனைக் கண்ட த்வாரபாலர்களும் மற்று முள்ளவர்களும் மரியாதை யுடன் எழுந்து வணங்கி நமஸ்கரித்து "ஜய விஜயீபவ" என்று வாழ்த்தினர். முதற்கட்டைத்தாண்டி இரண்டாங்கட்டிற் பிரவே சிக்கும்பொழுது அவ்விடத்திலிருந்த வேதபாரகாளாயிருக்கும் வே தியர்களின் மரியாதையுடன் கூடிய ஸந்தர் சனத்தைப் பார்த்த வண்ணம் சென்றனர். பின்னும் அங்கே காணப்பட்ட விருத்தர் களும் மகளீயர்களும் மகாராஜனால் ஸம்மானிக்கப் பட்டவாளும் பாரங்கதர்களுமான அந்தணசிரேஷ்டர்களைக்கண்டு ராமர் நமஸ்கரித் தனர். மற்றுமுள்ள ஸ்திரீகள், பாலகர்கள், த்வாரபாலகர்கள், கஞ்சுகிகள் முதலாயினோரும் ராமச்சந்தரனைக் கண்டதும் பரம சந் தோஷமடைந்தனர், ராமச்சந்திரனின் மாதாவான கௌசல்யா

தேவியாரிடம் ராமச்சந்திரனுடைய ஸங்கர்சனத்தையும் நல்வரவை யும் தெரியப்படுத்தினர். மகாராணியான தேவியாரும் முதல் நாள் ராத்திரி விரதமிருந்து மறுதினமாமன்று காலையில் தம் புத்திரனு டைய ஹிதத்தையும் க்ஷேமத்தையுங்கோரி வெண் பட்டுடுத்திக் கொண்டு பரம நியமனத்துடன் வைகுண்டவாஸனும் விஷ்ணு பூஜை யை யியற்றினர். நித்ய வ்ரதாத்யனுஷ்டான சீலவதியாங் கௌசல்யா தேவியார் ராமருடைய மங்களத்தைக் கோரி அக்கி முகமாய் ஹோ மங்களைப் பிராம்ஹணர்களைக்கொண்டியற்றியும் பற்பல தானங்கள் தர்மங்கள் சந்தர்ப்பணைகள், பூரி தக்ஷிணைகள் ஏராளமாய்ச் செய்து கொண்டிருக்குங்கால், லக்ஷ்மண சுவாமியுடன் ரகுநந்தனன் மாதா வின் ஸந்நிதானம் வந்தனர். அப்பொழுது அக்கினி முகமாய்ச் செய்யவேண்டிய ஆஹுதிகளை யியற்றிக்கொண்டும், ஸதர், சோபனு க்ஷதைகள், நெய், மோதகங்கள், ஹவிஸுக்கள், லட்டுகள், எள்ளன் னம் பாயஸம், வெள்ளை வெளேரென்றிருக்கும் புஷ்பமாலைகள், ஸமித்துக்கள பூரண கும்பங்கள் சகிதம் இருந்தும் தம்முடைய மா தாவைக் கண்டனர். வெளேரென்றிருக்கும் பட்டு பீதாம்பரந் தரித்தும், விரத நியமங்களினுல் சரீரமிளைத்தும் தேவதாஸ்திரீயை யொப்ப பரமசோபாயமானமாய் விளங்கிக்கொண்டிருந்த உத்தமியும் முதன்மையுமான ராஜமஹிஷியாம் தேவியார் தமமரும்புதல்வனைக் கண்டு களித்தும் உச்சிமுகந்தும், ஒருவரையொருவர் இருகக்கட் டிக்கொண்டும், புத்ர வாத்ஸல்யத்தினுலும் பிரியத்தினுலும ரகுகுல திலகனை நோக்கிச் சொல்வாராயினர். "அப்ப, குழந்தாய்! விருத் தர்களும் தர்ம நிரதர்களும் ராஜரிஷிகளும் மஹாத்மாக்களுமான ரகுகுலோத்பவர்களுடைய பூர்ணுயுளையும், என்று மழியாக்கீர்த்தி யையும். நிரந்தரமான தர்மங்களின் பயனையும் நீ அடைவாயாக வத்ஸ, ராகவ! ஸத்ய ஸந்தரும் அரசனும் பிதாவுமான தசரதர் மகா தர்மஸ்வரூபியாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற படியால், ஸர்வஜ் யேஷ்டனுன நினக்கு இப்பொழுதே யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்ய விருக்கின்றனர். அப்ப, குழந்தாய் இதோ இந்த ஆஸனத் தில் அமர்ந்து போஜனஞ் செய்யக்கடவாய் என்றனர். (தொடரும்,)

துறையூர், மா. சுப்பராமய்யர்.

"மதுவிளக்கு"

சகோதர சகோதரிகாள்.

இப்பூவுலகில் மானிடராய் பிறந்த நாமெல்லோரும் மதுவிளக்கு வதைப்பற்றி அறியவேண்டியது அவசியமே? ஆகையால் குற்றத் தை கறிக்காது குணத்தையே மேற்கொண்டு இச்சிறுவனை ஆசீர் வதிப்பீர்களென்ற முழுநம்பிக்கையுடன் வரையத்துணிந்த விடயம் தலைப்பில்காட்டிய "மது விளக்கு" என்பதைபற்றியே.

நம்மக்கள் மேல் நாட்டு நாகரீகம் வரவர நம் தாய் நாடாகிய தமிழ் நாட்டின் நாகரீகத்தை மறந்து விட்டனர். நம் தொழில்களை மறந்தனர். தமிழ் ஆச்சாரமே போய்விட்டது. கடவுள் பக்தியே போய்விட்டது. ஆனால் குடியோயதிகரித்து விட்டது. குடியினால் தமிழர் அடிமைச்சேற்றிலே, அறியாமைசூழியிலே, வறுமை புகரிலே விழுந்து கிடக்கின்றனர். சேர சோழ பாண்டிய இராஜாக்கள் ஆண்டகாலத்தில் அன்னசத்திரங்களும், தண்ணீர்பந்தல்களும் கட்டி ஜனங்களுக்கு யாத்திரையில் ஒருவிதமான கஷ்டமுமில்லாமல் செய்திருக்கின்றனர். இக்காலத்து இராஜாங்கத்தாரோ அன்னசத்திரமாவது தண்ணீர் பந்தலாவது கட்டிவைத்ததாகத் தெரியவில்லை, ஏனென்றால் அதற்காக நம்மக்கள் முயர்ச்சி எடுக்காத காரணந்தான். அதனால் நம்மக்களின் அறிவை அறிந்தே மேல்நாட்டார் அவ்விதம் செய்யத்துணிந்து பணத்தைபறித்து வறுமை புதரிலே தள்ளி ஏழ்மையாக்கிவிடுகின்றனர்.

நம் இராஜாங்கத்தார் சாராயக்கடைகளையும், கள்ளுகடைகளையும் ஏலமிட்டு ரஸ்தாக்களில் ஜனங்களின் நன்மையின் பொருட்டென்று சொல்லிவைக்கச்செய்கின்றனர். சாராயம் கள இவைகளை போன்ற லாகிரிவஸ்துக்களுக்கு போதை இருக்கின்றதா? இல்லையா? கலப்பு இருக்கின்றதா? வென்று பார்க்க இன்ஸ்பெக்டரை நேமித்திருக்கின்றனர் இதுவும் நமது ஜனங்களுக்காகவாம் ஜனங்கள் குடித்துவிட்டு, மயக்கத்தால் ரஸ்தாவில் கீழேவிழுந்து தள்ளாடிக்கொண்டு போனால், போலீசார் அன்னவர்களைப்பிடித்து அபதாரமோ கைதியோ செய்கின்றனர். என்னபாபம். என்ன பரிதாபம்! இதை நம்மவர்கள் அறியவில்லையோ? மது உண்பதினால் என்ன பிரயோஜனமிருக்கிறது. ஆகையால் மதுவை விளக்குவீர்களாக.

இவைகளையெல்லா மறிந்த நம் மக்களில் சிலர் தென்னம்பிள்ளைகளை கள்ளிறக்கவிடுகின்றனர் இது என்ன பேதமை. நாம் தென்னம் பிள்ளைகளை, குழந்தைகளைவளர்ப்பதுபோல் வளர்த்து அவைகளில் இரத்தத்தை பிழிந்தெடுப்பது போல் அதனுடையசத்துவாகிய கள்ளை இறக்குவதால் ஒரு சிசுவை கொலைசெய்ததற்கு சமானமாகும். நாம் தென்னம்பிள்ளையை கள்ளுக்கிடுவதினால் குடியர்கள் அதிகமாகி தாய்நாடு க்ஷீணதிசையடையும் எப்படி என்றால்,

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரம்
குடியுயர கோனுயர்வான்"

என்று ஔவை பிராட்டியார் கூறிய பிரகாரம் நம்மக்கள் தென்னைமரத்தை கள்ளிறக்கவிட்டால். கள் அதிகரிக்கும். கள் அதிகரிக்க கடையதிகரிக்கும. கடையதிகரிக்க குடியர் அதிகரிக்கும் குடியர் அதிகரித்தால் நம் நாடு க்ஷீணதிசை அடையும். ஆகையால்

நாம்தென்னைமரத்தைகள்ளுக்கடைசாராயக்கடைஎலமெடுப்பதையும் மறந்துவிட வேண்டும். இது முதல் நம்மக்களும் ரஞ்சிதனும் மேன்மைக்கு வரவேண்டுமென்று கடவுளை பிரார்த்திப்போமாக.

சா. ரு. சொக்கலிங்கம் பிள்ளை.

பொருள்வைத்தச்சேரி சிக்கல்.

மதனசுந்தரி அல்லது மர்டிக்கொலைகள்.

(136 ம் பக்கத்தடர்ச்சி).

மதனன்:—எனக்கு வேண்டிய உபகாரமாவது என்னவென்றால் நான் எனதண்ணன் முன் சுந்தரியை அவரிடமிருந்து பிரித்து நானே விவாகம் கொள்வதாய் சபதம் செய்திருக்கிறேன் அதை நிவர்த்திக்க நீதான் சுந்தரியை அவரிடமிருந்து பிரித்துகொண்டு வர வேண்டும் என்னுடைய ஆருயிர் நண்பனே எனக்கு இவ்வரிய உபகாரத்தை செய்வாயா மாட்டாயா ?

மதனின் உபகாரம் சாமளவர்ண முதலியாரின் மனதில் ஊடுருவிச்சென்று திகைத்தபோதிலும் ஏதோ பெரிய யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு கொஞ்சம் நேரங்கழித்து எதையோ ஒன்றைக்கண்டு பிடித்தவர் போல் தலையை நிமிர்த்தி சற்று நிதானித்தார் பிறகு மதனனை நோக்கி, '' நண்பரே நான் அப்படி செய்வது பொருத்ததாயல்ல,ஏனெனில் நானே இப்பொழுது பிரதாபமுதலியாரது உப்பை தின்று உயிரை வளர்க்கிறேன் ஆதலால் யெஜமானத்துரோகம் போல் உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்வது போலும் அன்னமிட்ட வீட்டிற்கே கன்னமிட்டதை போலும் செய்தல் கூடாது அதற்கென்செய்வது. ''

மதனன்:— எனதன்பான நண்பா உன்னைத் தவிர எனக்கு வேறு கதியில்லை நீ தான் இதற்குத்தகுந்த யேற்பாடு செய்ய வேண்டும் இல்லையேல் அந்தோ என்னுயிர் போவதும் தவிர எனதாருயிர்க்காதலியினுயிரும் பிரிவது நிச்சயம் ஆதலால் எங்களிருவரினதாவியும் உன்னிடமிருப்பது போல் நினைத்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

சாமளன்:-- ஆ ஹ்ா ! அப்படியா ! நண்பா! அறிந்தேன் நினது துயரை அதை நினைக்கையில் என் மனம் தடுமாறுகிறது. இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நண்பா நான் சொல்வதைக்கேள் நீ இன்றிரவு எப்படியாவது பங்களாவிற்கு சென்று சுந்தரியுடன் சகல சங்கதிகளையும் தெரிவித்து விடு அதுவும் சொல்லிவிடுகிறேன் என்றால் திடீரென்று சுந்தரியைக் கொண்டுவரமுடியாது ஆனால் இன்னும் ஒரு

வாரத்திற்குள் நான் சுந்தரியைக் கொண்டுவந்து சேர்ப்பேன் இச்சங்கதியை மட்டும் சுந்தரிக்கு தெரிவிக்கவும்.

மதனன்:---அந்தோ ! நான் எப்படி தெரிவிப்பேன் நான் எப்படியாயினும் செய்துதான் தீரவேண்டுமோ ? அங்கு சென்றால் சண்டைவிளையுமோ ?

சாமளன்:----மதனரே நீங்கள் அப்படி தெரிவிக்காமல் போனால் தான் உனக்குவேண்டிய உபகாரத்தை செய்யமுடியாது.

மதனன:---(சற்று யோசித்து) சரி இன்றிரவே செய்கிறேன்.

சாமளன்:--- சரி நாமிருவரும் சாப்பிடப்போவோம் மணி ஏழாய்விட்டது என்று சொல்லிக்கொண்டேகாலிங்பெல்லை அடிக்க மாதவன் வந்தான்.

சாமளன்:----மாதவரே எங்களிருவருக்கும் சாப்பாடு போடு நீலமேக முதலியார் வந்தாரோ ?

மாதவன்:--- ஐயா அவர் இப்பொழுது தான் சாப்பிட்டு விட்டு எங்கோ அவசரமாய் சென்றுவிட்டார். சாப்பாடு இங்கேயே கொண்டுவருவதா ?

சாமளன:--- ஆம் இருவருக்கும் இங்கேயே கொண்டுவந்துவிடு அடுத்த நிமிஷமே மாதவன் சாப்பாடுகொண்டுவர சென்றுவிட்டான். மதனன்றாம் தங்களுடைய சம்பாஷணை யனைத்தும் மாதவன் மறைவினின்றும் அறிந்திருப்பானோ எனச் சந்தேகமுற்றான். இருந்தாலும் அவனது மனதில் தைரியலட்சுமி குடிபுகவும் தைரியத்தினால் தனது சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொண்டான்.

அச்சமயத்தில் மாதவன் சாப்பாட்டுடன் வந்து இரு இலையை இருவருக்கும் போட்டு பரிமாரினார். பிறகு இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள் மதனின் மனம் குழம்பியிருந்ததால் கொஞ்சமாக ஆகாரம் உட்கொண்டு எழுந்து விட்டான். பிறகு சாமளனும் சாப்பிட்டு விட்டு தான்போய் வருவதாய் சொல்லி போய்விட்டான்.

பிறகு மதனன் தனியே இரண்டுமணிநேரம் வரையிலும் உலாவி விட்டு தனது சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

மணியோ சுமார் 10 இருக்கும் அமாவாசை இருட்டு இருளென்றாலும் மேகக்காரிருள். கண்டவர்கள் நடுங்கும்படியான இருள். பிரமாண்டமான மரங்களெல்லாம் பெரியதோர் பயங்கர பிசாசைபோல் தோற்றுகிறது. வெளிச்சம் என்னும் பிரகாசமானவன் சிறிதும் வெளிவரவில்லை அரண்டவன் கண்ணிற்கு இருண்ட தெல்லாம் பேய் என்பது போல் எங்கும் நிச்சப்தமாய் இருந்தது. மரங்கள் காற்றினால் அசையும் சங்கதிகள் கேட்டது. மரங்கள் நாலா பக்கமும் அசைந்தாடுவது பெரிய பிசாசுக்கள் தலையை விரித்தாடுவது போல் தோன்றுகிறது. இரவில் இருவிழிகளும் தெரியக்

கூடிய வெளவால்கள் அங்குமிங்கும் அலறிகத்திக் கொண்டோடிப் பறந்தன. ஆந்தைகளும் அலறின, இவ்விதகாரிருளில் நமது மதனன் அஞ்சாது ஜமீன் பங்களாவை நோக்கி சென்றுக்கொண்டிருந்தான். இவனது இடையில் ஒரு நீளமான கத்தி தொங்கிக்கொண்டிருந்தது. அவ்விதக்காரிருளிலும் அக்கத்தி பிரகாசித்து பளபளவென்று மின்னிககொண்டிருந்தது. அவனது நடை சுந்தவீரனின் நடைபோலிருந்தது. அடிக்கடி சுந்தரியின் நினைவு அவளது பிரதிபிம்பமாய் நின்று நின்று செல்லும்படி செய்தது. ஜமீன் பங்களாவிற்கும் ஜோதிவிலாசத்திற்கும் சுமார் இரண்டு பர்லாங்கு தூரமிருக்கும.

மதனனும் ஒருபர்லாங்கு தூரம் வந்துவிட்டான். அதே நிமிடத்தில் மதனன் திடுக்கிட்டு நின்று உற்று கேட்டான் அப்பொழுது 5, 6 மனிதர்கள் வரும் காலடி சத்தத்தை கேட்டான் தனக்கு அபாயம் வருமோ என்று தனதிடையிலிருக்கும் கத்தியை எடுக்க கையை அதன் கைப்பிடியின்மேல் வைத்த மறுநிமிடமே அவனை இரண்டு கருப்பு உருவங்கள் பிடித்துக்கொண்டன இருப்புச்சங்கிலியால் கட்டப்பட்டவன் போலானுன். உடனே இன்னும் இரண்டு கருப்பு வுருவங்களும் ஒரு வெள்ளை உருவமும் இவனதருகில் வந்தது அவ்வெள்ளை உருவமும் தனது ஸகையைத்தூக்கியது. அதே நிமிடத்தில் மதனனது கண்களை அவ்விரண்டு கருப்பு வுருவங்களும் ஒரு துணியால் கட்டிவிட்டு அவனை ஒருகுதிரை மீதேற்றினார்கள். வெள்ளை உருவம் ஏதோ அந்நாலுகருப்பு உருவத்திற்கும்கட்டளையிட்டு தனது வெள்ளை உடையை ஒரு கருப்புடைதரித்து இருந்தவனுக்கு கொடுத்து விட்டு அக்கருப்புடையை அதுதரித்துக்கொண்டது. உடனே இக்கருப்புருவங்கள் மூன்றும் வெள்ளை வுருவம் ஒன்றும் தங்கள் தங்கள் குதிரை மீதேரிக்கொண்டன. வெகுநேரம் பிரயாணம் செய்தன.

பிறகு ஒரு இடத்தில் நின்றன. எல்லாரும் மதனனை ஒரு மரத்தில் கட்டினார்கள். அப்பொழுதுதான் மதனன் தானிருக்கும் இடம் கள்வர்களுக்கெல்லாம் பேர்போன, புல்லூநக்தம், சிறறாருக்கும் மத்தியிலுள்ள பெரியக்காடு என்று தெரிந்தான். பிறகு சற்று நேரங்கழித்து மதனன் அவ்வுருவங்களைநோக்கி, "ஐயா, என்னை ஏன் பிடித்து இப்படி கட்டிவைத்துக்கொண்டு காவலாய் நிர்கின்றீர்கள். நான் யாரோ நீங்கள் யாரோ என் கஷ்டகாலத்திற்கேற்ப என்னை பிடிப்பானேன்'' என்றான். அதற்கு அந்த வெள்ளை உருவம், அடே:வாய்திறந்து பேசாதே. உன்னை நாங்களறிவோம். ஆனுல் நீ எங்களை யறியாய் ஆயினும் எங்கள் கடமை உன்னைகொல்வதல்ல பயப்படவேண்டாம் எங்களது எஜமான் உன்னைவிடிய நான்கு மணி நேரத்திற்கு முன் நாங்கள் உன்னை எங்கே பிடித்தோமோ

அங்கேயே கொண்டுபோய் விடவேண்டியது. அதற்குள் உன்னை நாங்கள் விடவும் முடியாது உன்னால் தப்பித்துக்கொள்ளவும் முடியாது இனி எங்களோடு பேசாதே" என்றது. (தொடரும்),

R. G. Rajan.
திருச்சினாப்பள்ளி.

ஓர்விண்ணப்பம்.

என் இனிய ரஞ்சித! நின் மழலைச் சொற்களால், ஒரு வயது பாலனாய் நீ பலவிடங்களிற் சென்று சிறுமி சிறுவர்களுக்கு நன்மதி யூட்டியும், கனதனவான்களாய் விருபாலரையும் நின்கொஞ்சுமினிய வாசகங்களினால் உற்சாகப்படுத்தியும்உலாவுகின்றனை என்பதில் சிறிதளவும் ஆக்ஷேபனையில்லை பிரகிருதத்தில் சிறுமி சிறுவர்களாய நம்மவர்கட்கு நீபோதிக்கவேண்டிய நீதிமார்க்கம் யாதெனின், பதிவிரதமும்; சத்ய விரதமுமாம். முக்கியமாய் பதிவிரதமே நிலைக்க வேண்டுமென்ற நன்னோக்குற்றவராம் நமது நண்பர் "சுருண்டையூனியன் போட்டு ஆபீஸ் A. S. T. மஹாராஜ் ரென்பவர் நின் வாயிலாய் நாளது வருஷம் வைகாசிமாதப் பத்திரிகையில் 148 வது பக்கத்தில் சிறிது வரையலாயினர். அவருக்கு நமது அன்பார்ந்த வந்தனம் தந்தனம். உலகில் பதிவிரதமுளதாயின் சத்திய விரதமும் பரிணமிக்கு மென்பதில் தடையிலலை. பதிவிரதம் ஸ்திரீகட்கேற்பட்ட தருமமாம். பெண்பாலர் நெறியான மார்க்கத்திலிருப்பதிலிருந்தே புருஷர்கள் எத்தகைய துஷ்டர்களாயினும் நல்வழியைப் பற்றுவர் என்பதில் ஐயஞ்சிறிதுமில்லை. துன்மார்க்கத்தைக்கொண்ட பதியின்; சதியானவள், அந்தப்பதியின் சமயம் நோக்கி, "நின் சகோதரியேனும், அன்னையேனும், இளம்புத்திரியேனும், தகாத அயல் புருஷனைக்காதலிப்பதால், உனக்கு எவ்வளவு மனக்கொதிப்பும் சங்கடமும், மானமும் பாதிக்குமெனபதை யெண்ணிப்பார்த்து கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற என்னைக் கொண்டு உன் இஷ்டப்படி அனுபவித்து திருப்தியடையலாகாதோ; அக்னி சாட்சியாய் உற்றார் உரவினர் அறிய சதிபதிகளாய் நாமிருவரும் விவாஹபந்தத்திலகப்பட்டிருக்கையில் வேற்று நினைப்பேன்! விஷயமொன்றுதானே! ராமச்சந்திரன் ஏகபத்நீ விரதனாயிருக்கவில்லையோ! சீதாதேவியும் தன் பதியினிடம் உயிருக்குயிராய் நேசித்து வந்தனர் என்பது நாம் அறியாதோ! சாவித்திரி நமனைத்தொடர்ந்ததன்றோ பதியின் உயிரை மீட்டுக்கொண்டு வந்தனள்! விவாஹகாலத்தில் பௌரோகிதர் நடத்திவைக்கும் மந்தரங்களின் தத்வார்த்தை அறிந்தால் பிறனில் விழைவோருமுண்டோ? ஸ்திரீ புருஷரை பற்பல அகோரமான பிரமாணவசனங்களினால் இந்தராதி தேவர்கள், சப்தரிஷிகள்

சூர்ய சந்த்ராதி சமஸ்தமான தேவர்கள் ஆகாயவாணி பூமிதேவி சாட்சியாய் பந்திக்கின்றனரே? அப்படியிருக்க சத்தியந்தவறி நடப்பவர்தாம் செழித்தோங்குவரோ! அஸத்ய வாதிகளின் முன் உலகம் தானெப்படி செழித்தோங்கும்?" என்று ஹிதமொழிகள் கூறிவந்தாலே துஷ்டபதி இஷ்டபதியாய் விடமாட்டாரனோ? இத்தகைய ஸ்த்ரீ புருஷ பந்தத்தினுலும் ஸ்நேகத்தையே யன்றோ ஹே, ரஞ்சித! நீயுன் மழலையால் உலகுபுகழ பற்பல புனிதவதிகளின் சரித்திரத்தைக் கொண்டு போதித்து வருகின்றனை! சுலோசனையும், மிருகாவதியும், இருபாலரும் ஒருமைப்பட்டு வாழும்படியான நன்மார்க்கத்தைப் போதிக்கின்றன! நின்னை அன்புடன் வளர்த்து வரும் தந்தையராம் முதலியாரும் சுலோசனையையும் மற்றபுனித இனிய சரிதங்களையும் புத்தக உருவாகக்கருதின் நன்மையேயாம். அப்பொழுது உலகினர் காமபற்றை நீக்கி தர்மகாமத்தைக் கைக்கொண்டுய்வார்கள் திண்ணம் அதற்கு துணைகருவி நமது ரஞ்சித போதினியே என்று ஒவ்வொருவரும் மனதில் எண்ணி ஸ்வல்ப சந்தாவாகிய அணு பதினன்கை (அணு 14) ச் செலுத்தி பத்திரிகையைப் பெற்று, தர்ம நீதிகளைச் செவ்வனே தெரிந்து நீடூழி வாழ்வார்களாக, நானும் சந்தாதாரர்களைச் சேர்க்க பிரயத்தனப்பட்டுக் கொண்டு தானிருக்கின்றேன். இவ்வாறு இந்த நமது ரஞ்சிதனைப் பெறும் ஒவ்வொரு நண்பரும் முயற்சிக்கவேண்டுமோய் எனது அன்பார்ந்த பிரார்த்தனையாம்.

உலகில் மானிடராய்ப்பிறந்தோர் ஒவ்வொருவரும் புகழுடம்பு பெறவேண்டி பெரிது நலங்கருதி யொழுகவேண்டும் சுயநலத்தையே பெரிதாய்க்கருதி யொழுகுபவர் சிலாக்கியமாய்க்கருதப் பட்டவரல்லர். பொது நலங்கருதியே நமது சுலோசனையைப் புத்தக ரூபமாகக்கருதி மதுரை பிரம்மஸ்ரீ M S. வெங்கிட்ராம கிருஷ்ணய்யரவர்கள் எம்மைத் தூண்டி, மதுரை ம-ள-ள-ஸ்ரீ, கோபால கிருஷ்ணக்கோன் அவர்களினுதவியால் சுலோசனு தேவியாரின் கற்பின் மகிமையை உலகில் பரவச்செய்யுமாறு முன்வந்தனர். இப்பொழுது சிலநாட்களாய் சற்றே பின் வாங்கியிருப்பதாய்த் தோற்றப்படினும் மீண்டும், நம்முடைய நன்னேக்கத்தைய கருதி முன் செய்த முயற்சியைத்தளரவிடாது கூடிய சீக்கிரத்தில் சுலோசனையை விசேஷ உருவப்படங்களுடன் நல்லமாதிரியில் புத்தகரூபமாக்கும் பொருட்டு மேற்கூறிய, பொது நலத்தினையே விரதமாய்க் கொண்டொழுகுஞ் சீலராய் கோபால கிருஷ்ணகோன் அவர்களைத் தூண்டுதல் பண்ணி தமதுவாக்குறுதியைக் காப்பாற்றிக் கொடுப்பரென்றே கருதி இங்ஙனம் ரஞ்சித மூலமாயும் தெரிவித்துக் கொள்ளலாயினம். உலகு புகழும் இத்தகைய நற்காரியங்கள் முற்றுப்பெறின் அன்னவருடைய உள்ளமும் பொதுநலங் கருதியதாகுமே. சுபம்! சுபம்!

துறையூர், மா. சுப்பராமய்யர்.

சங்குபாலகன்.

4 ம அத்தியாயம்.

பிணந்தின்னியிடம் சிக்கி மீளுதல்.

இறைவனருள் பெற்ற எவருக்கும் துன்பம் நேரிடினின் அது அவரை வருந்துமா? ஒரு போதும வருத்தாது. உடனே ஒரு பலத்த மழையடிக்கவே குட்டையில் வெள்ளம் வந்தடித்துச் சங்கு பாலகன் மேலிருந்த கல்லை நகர்த்தித் தள்ளிற்று. உடனே அவன் மேட்டில் ஏறிவந்து அங்குமிங்கும பார்த்தான். பிணந்தின்னிஅரக்கி இல்லாதிருக்கவே அவ்வரக்கியின் மகளிருக்கும் குடிசைக்கு ஓடி வந்து நடந்தவற்றைக்கூறினன். அச்சமயத்தில் பிணந்தின்னிதான் கல் ஏற்றி வைத்த பாலகனிருக்கும் இடத்திற்கு வந்து பார்த்த பொழுது அவனைக்காணமல் அவன் சென்ற அடியை மோந்து பாரத்துக் கொண்டே குடிசைக்குத் திரும்பி வந்தாள். அங்கு தன் மகளை யழைத்துச் சங்குபாலகனெங்கேயென அவன் முன்பே இங்குவந்து விட்டான் என்றாள் மகள். சரி இன்று நீதப்பித்துக்கொண்டாய் என் றிருந்தாலும் உன்னைத்தின்பேன்.” என்று எண்ணிக்கொண்டிருந் தாள்.

இவள் எண்ணத்தையறிந்துக்கொண்ட விநாயகரடியாள் நமது சங்கு பாலகனையழைத்து, “தம்பி! நீ இங்கிருந்தாயானல் என் தாய் எவ்விதத்திலும் உன்னை உண்டு விட எத்தனிப்பாள் நீ பிணந் தின்னியரக்கி வாயப்பட்டிறந்து விடுவாயானல் எனக்கு மிகுந்த துக்க மூண்டாகும் விநாயகக்கடவுள் என்மீது வருத்தப்படுவர். ஆகை யால் நீ வேறிடத்திற்கேகி அங்குசுகமாய் வாழ்ந்து வருவாயாக.” எனக்கூறினள்.

“அம்மா! யான் இவ்வடர்ந்த பெருங்காட்டில் எவ்விதம் வழி கண்டு எங்கு செல்வேன், இன்ன இடத்திற்குபோ என வழி காண் பிப்பீராகில் யான் அவ்வழியைப்பற்றிச் சென்று பிழைப்பேன். இது உங்கள் கடமையாகும்” எனத் தாழ்மையாக கூறினன் சங்குபால கன்.

“இதைக்கேட்ட அவ்வரக்கியின் புதல்வி விநாயகக்கடவுளை, நினைந்து. “நீர் அனுப்பிய இச்சிறுவனை யான் எங்கு அனுப்புகின்ற தெனத் தெரிவிப்பீராக” எனத் தொழுது ”ஞான திருஷ்டி” வழி யாய் நோக்கியபொழுது வெகுதூரத்தில் ஒரு ஆலயமும் அதைப் பற்றிய விவரமும் தெரியவந்தது “அப்பா! சங்குபாலகா! நீ வடக் குத் திசையை நோக்கி நேராய் நடந்து செல் வெகுதூரம் சென்ற வுடன் ஒரு பழமையான ஆலயம் ஒன்று தோன்றும். அது வெகு காலமாக—உன் பாட்டன் காலத்திற்கு முன்—அடைக்கப்பட்டிருக் கும் ஒரு சிவாலயமாகும். அவ்வாலயத்தின் கதவு நீ தொட்டால்

தான் திறந்து வழிவிடும். உட்சென்று பார்ப்பாயானல் அங்கு ஒரு அழகிய நந்தவனத்தை காண்பாய். அதன் நடுவில் ஒரு குளமும் இருக்கும். அதில் நீராடி விட்டுக்கடவுளைத் தொழுது உனக்கு விருப்பமான உணவு வரவேண்டு மென நினைப்பாயானல் உடனே அறுசுவை உண்டிகள் றூமேலணி வழியாக வந்திறங்கும் அங்கு "மா போகி". என்னும் பெயரையுடைய இரு புரவிகளும் இருக்கின்றன. அன்றியும் அந்த வனத்தைச் சுற்றிக் கட்டியுள்ள அடைப்பின்மேல் ஒரு ஒணன் தோல் கிடைக்கும் உன் அழகை எவரும் காண்பாரா கில்...........பின் நீ உன் தந்தையினிடம் சேரமுடியாது. ஆதலால் அங்கிருக்கும் அத்தோலினல் உன் உடம்பைப் போர்த்துக்கொண்டு ஆறுதிங்கள் வரை பொறுத்திருப்பாயானல் அது உனக்கும் தெரியாமல் ஆறும் திங்களின் முடிவில் மறைந்து விடும். பிறகு நீ உன் தந்தையினிடம் இலகுவில் சென்றவிடலாம். நீ போர்த்திருக்கும் அத்தோல் பிறர் பார்வைக்குச் சீழ்வடிந்தும் நாற்றம் வீசுவது போலவும் தோற்றும். ஆனல் உனக்கு அவ்விதந்தோற்றாது" என்று எல்லா விவரங்களையும் கூறிமுடித்தாள். இதைக்கேட்ட சங்குபாலகனுக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்று.

"சரி; யான் சென்று வருகிறேன் அம்மா! விடைகொடுங்கள்" எனப்பணிவுடன் கேட்டான். சுகமாய்ச்சென்றுவா; கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்' என்று அவனை வாழ்த்தி அனுப்பினள் அரக்கி மகளான விநாயகரடியாள். பின்பு அவன் வடக்கு முகமாக நேராய்ச் சிவாலயத்தை நோக்கி நடக்கலாயினன்.

4 ம் அத்தியாயம் முற்றிற்று.

5 ம் அத்தியாயம்.

வண்ணத்திவிட்டில் வேலை செய்தல்.

வழியோ கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியாயிருந்தது காடோ பலவித விலங்குகள் வாழும் இருண்ட காடாயிருந்தது பருத்து உயர்ந்த பெரிய மரங்கள் கிளைகளைப்பரப்பி யிருந்ததனல் எங்கும் நிழலாயிருந்தது, அதனல் சங்குபாலகன் ஆயாசமின்றி வெகுதூரம் கடந்து சென்றுவிட்டான், இன்னும் சற்று அப்புறத்தில் ஒரு தெளிந்த நீரோடையும் அதனருகில் ஒரு பழய ஆலயமும் அதனைச்சுற்றிச் செழித்த பசும் புற்றரையும் அழகிய மலர்களையுடைய பூச்செடிகளையும் கண்டான். அம்மலர்கள் மலர்ந்து காற்றில் அசைந்தாடுவதை நோக்கின் அவைகள் இவனை அன்புடன் வரவேற்பது போலிருந்தது உடனே சங்குபாலகன் தன்னிருகரங்களையுமுயர்த்திச் சிரமேற் கூப்பித்தொழுது கொண்டே திருவாயிற்படியையடைந்து மூடப்பட்டிருந்த திருக்கதவைத்திறந்து உட்சென்றான்

செல்லவே அரக்கி மகளுரைத்தவாறே அங்கு எல்லாம் சரியாயிருந்தன. உடனே நந்தவனத்தின் குளத்தில் நீராடிவிட்டு கடவுளைத் தொழுதான் வெகுநேரம் கண்களில் நீர் பெருக, அச்சத்தோடும் அனபோடும், நாகுழறச்சிவபிரானைத்தொழுதபின் ஓரிடத்திலுட்கார்ந்து உண்டி வேண்டுமென நினைத்தவுடனே நருமணங்கமழ்ந்த அறுசுவையுண்டிகள் வந்திறங்கின. இவைகளைத் தானுமுண்டு குதிரைகளுக்குங் கொடுத்துவிட்டு அடைப்பின்மேற்கிடந்த ஒணான் தோலை எடுத்துப் போர்த்துக்கொண்டு வெளியில் வந்து திருக்கதவை மூடிவிட்டு ஒரு திசையை நோக்கிநடந்து சென்றான். வழியில் ஒரு மைதானத்தில் சில பிள்ளைகள் பந்தாடிக்கொண்டிருந்தனர். அவர்களைக்கண்டு தோழர்களே! யானும் உங்களுடன் விளையாட இடந்தருவீர்களா?'' என்று கேட்டான்.

„அடே! யாரடா இவன் சீழ்படிந்த நாற்றமுள்ள புண்களையுடைய நீ எங்களுடன் விளையாடத்தகுதியாமோ? என்றனர் அப்பிள்ளைகள்,

"அப்படியானல் யான்மாத்திரம் ஒரு பக்கத்தில் நின்று விளையாடுகின்றேன் நீங்களெவரும் எதிர்பக்கத்தில் நின்று விளையாடுங்கள்'' என்றான் இவன். (தொடரும்.)

அ,ச, அருணசலலேஸ்வரர்,
ரூவான் வெல்ல இலங்கை.

"விபூதி"

அநாதிமலமுத்த சுத்த சாட்குண்ணிய பரிபூரணராய், ஆதிமத்தியாநந்த சமானதிக நாமரூப குணரகிதராய் விளங்கும் ஸ்ரீமத்சதாசிவமூர்த்தியின் பஞ்சவத்திரங்களாகிய,சத்தியோசாதமுகத்தனின்று நந்தை யென்னும் பசுவும், வாமதேவமுகத்தினின்று, பததிரை யென்னும் பசுவும், அகோர முகத்தினின்று சுரபி என்னும் பசுவும், தற்புருடமுகத்தினின்று சுசிலை யென்னும் பசுவும், ஈசானமுகததினின்று சுமனையென்றும்; அவைகளில் நந்தை கபில நிறமும், பத்திரை கருமை நிறமும், சுரபி வெண்மை நிறமும், சுசிலை புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனதாயிருக்குமென்றும், இவ்வைந்து பசுக்களும் இச்சிவபெருமானது சந்நதிக்கணுள்ள இடபதேவரின் பக்கத்திலே வீற்றிருந்தனவாமென்றும், ஓர் காலத்தில் இவற்றைச்சிவபெருமான் அநாதிமலபெத்த பசுக்களாகிய ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறும்பொருட்டுப் பூமியிற் பிறக்கச்செய்தால், இவை ஆதியில் தேவர்களும் அசுரர்களும் கூடி அமுதங்கடைகின்ற காலத்திற் திருப்பாற்கடலின் வழியாய்த்தோன்றி இப்பூமியின் கண் விளங்கினதென்றென்றும் வீராகமம்முதலிய சிவாகமங்கள் கிளர்ந்தெடுத்தோதுதலினாலும் இவ்வீராகமக்கொள்கையை கைப்பற்றினவராகிய, துரைமங்கல சிவப்பிரகாசசுவாமிகள் அருளிய சித்தாந்த சிகாமணியிலும்,

தோன்றியிடு நந்தை பத்திரை சுரபி சுசிலை யொடுசுமனையென்ன
வான்றிறமோரைந்து மெழிற் சத்தியோசாத முதலரன்முகத்தி
லேன்றமுறை கபிலை நிறங்கருமைமிகும் வெண்மையெழுந்திலங்கு [செந்நீக்
கான்றபுகை நிறஞ்செம்மை யெனுமைந்துமவற்றினிறங்கண்டு கொ [ண்டுமோ.

என்னும் செய்யுள் வருவனவற்றானுணர்க.

இங்ஙனம் கூறப்பட்ட பசுக்களின் உறுப்புகளில் தேவர்களும் முனிவர்களும், தீர்த்தங்களும் இருக்கின்றனவாம் என்றுவேதாகமங் கூறுகின்றமையால் அவைகளையிங்ஙனம் கூறுவாம். பிரமனும், விட்ணுவும் பசுவின் கொம்பினடியிலும், கோதாவிரி முதலிய தீர்த்தங்களும், சராசரமும் கொம்பினுனியிலும், சிவபெருமான் சிரசிலும், உமாதேவியார் நடுநெற்றியிலும், முருகக்கடவுள் நாசி நுனியிலும், திக்குபாலகர்கள் உண்ணுசியிலும், அசுவினி தேவர்கள் செவிகளிலும், சந்திரனும் சூரியனும் கண்களிலும், வாயு தந்தத்திலும், வருணன் நாவிலும், சரஸ்வதி இருதயத்திலும், இயமனும் இயக்கர்களும் கபோலத்திலும், உதயம் மத்தியானம் அஸ்தமனமென்றும் மூன்று காலத்திற்குமுரிய அதிதேவதைகள் உதட்டிலும், இந்திரன் கழுத்திலும், அருக்க தேவர் முசிப்பிலும், சாத்தியர் மார்பிலும், அநில வாயுநான்கு கால்களிலும், மருத்துக்கள் முழங்காலிலும், நாகலோகத்தார் குளம்பினுனியிலும், கந்தருவர் குளம்பின் நடுவிலும், தேவமாதர்கள் மேற்குளம்பிலும், உருத்திரர் முதுகிலும், அட்டவசுக்கள் சந்துகளிலும், பிதுர் தேவர்கள் அரைப்பரப்பிலும், சத்தமாதர்கள் பக்கத்திலும், திருமகள் முகத்திலும், தேவர்கள் அடிவாலிலும், சூரியனொளி வால் மயிரிலும், ஆகாயகங்கை கோசலத்திலும், யமுனை கோமயத்திலும், மாதவர்கள் உரோமத்திலும், பூமிதேவிவயிற்றிலும் சமுத்திரங்கள் முலையிலும், காருகபத்தியம் ஆவகனீயம் தக்கணாக்கினியென்றும் மூன்றக்கினிகளும் வயிறு இருதயம். முகம், என்னும் மூன்றிடங்களிலும், யாகத்தொழில் மூழுவதும் எலும்பிலும் சுக்கிலத்திலும், கற்புடை மாதர்கள் எல்லா அவயங்களிலும் வசிப்பார்கள் எண்பதாம் இதனை சர்வோத்தமாகமம் உபதேசம் ஐந்தினுள் முதலாவதாகிய சிவதருமோத்திரம் கோபுரவியல் [123-வது செய்யுள்முதல் 138-வது செய்யுள்வரையில் காண்க. எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களில் இவ்யோனியே சிறந்தனவாகையால் பசுக்களை தருமதேவதை சொரூபமெனப் பாவித்தல் வேண்டும். இத்தரும சொரூபமாகிய பசுக்களிடத்தே உற்பவிக்கும் கோமயமே விபூதிக்கு முதற்காரணமாம் என்று சிவாகமாதிகளும் உபநிஷத்துக்களும் விரிந்துரைக்கின்றன.

விபூதியில், வைதீக விபூதி, சைவவிபூதி என இருவகைப்படும் இவைகளுள், வேதவிதிப்படி செயயப்பட்ட யாகங்களிற் பொடிப் பட்ட நீறு வைதிகவிபூதி யென்று பகரப்படும் இதில புராதனி, சத்தியோசாதை என இருதிறப்படும் இவற்றுள் பிரமதேவரது ஓமகுண்டத்தில் விளைந்தது புராதனியென்றும், அந்தணர்கள் வளர்க்கும் யாகத்தில் உண்டானது சத்தியோசாதை யென்றும் சொல்லப் படும் இவ்விபூதி புத்தி ஒன்றை மாத்திரம் அளிக்கும். இருவினை யொப்புமலபரிபாகமூற்ற சிவ சத்தி நிபந்தரார்குரியதாய் ஆகமவிதிப் படி சிவதீக்ஷைசெய்யப்பட்ட தனலிற் பொடிப்பட்ட நீறு என்று ஓதப்படும் இவைகளிற் கற்பம், அநுகற்பம், உபகற்பம். அகற்பம் என நால்வகைப்படும் இந்நான்கும் புத்தியையன்றி முத்தியையு மளிக்கும். இச்சைவ விபூதி நால்வகையில் சைவநீறு, அசைவநீறு என இருவகையாம் அவைகளில் வாகீசுவர வாகீசுவரிகளிடத்துத் தோன்றிய சிவ சமஸ்காரமாகிய தீக்ஷையையுடையவர்கள் அணிவது சைவ நீறு யென்றும் அவைபெறுதவர் அணிவது அசைவநீறு யென்றும் கூறப்பம்கின்றது. இதன் விரிவை பேரூர் புராணம் உபதேச படலம் (16-17-18) வது செய்யுளினுலுமுணர்க.

கற்பம்:—

விபூதி யுண்டாவதற்கு முதற்காரணம் கோமயம் (சாணம்) அவைகொள்ளுமிடத்து கன்று பிரசவித்துப்பத்து நாள் சூதக முடைய பசு, கன்று பிரசவியாததாகிய கிடாரி, வியாதியுடையபசு, தன் கன்று சாவப்பெற்ற பசு, மலட்டுப்பசு, துர்க்கந்தம் பொருந்திய மலத்தையுண்ணும்பசு, ஆகிய இவற்றின் கோமயத்தால் விபூதி செய்தல் குற்றமாம். இவைகளல்லாத மற்றைபசுக்களின் கோமயத்தால் விபூதி செய்தல் விதியாம். பங்குனி மாதம் பசானமென்றும் நெல்லினது தாளைமேய்ந்தபசுக்களையடைந்து வணங்கி, கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச்செய்து, அட்டமி, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி முதலிய திதிகளிலே கோமயங்கொள்ளுதல் வேண்டும். இதில் பிராமணர்முதலிய நான்கு வருணத்தாரும் முறையே, வெள்ளை, சிகப்பு, பொன்மை, கருமை என்னும் நிறங்களையுடைய பசுக்களின் கோமயத்தையே கொள்க.

கடம்பவனபுராணம்.

தாவில் கபில நிறநந்தை தவளஞ்சுரபி மறையோர்க்கா
மேவு சுமனை நிறஞ்சிவப்பு விறல் சேரரசர் தமக்குரித்தா
மேவமகலுஞ் சுசிலைநிறமிசை தூம் பிரஞ் சொல்வசியருக்காம்
பூவினுயர் பத்திரை கருமை பொங்குநிறஞ்சூத்திரர்க்காகும்,

கோமயங்கொள்ளுதல், மூவகைப்படும். அவை, சாந்திகம், பொட்டிகம், காமதம் எனப்படும். இவைகளில் கோமயமிடும்போது பசுவின் பின் தட்டிலே கைவைத்து ஏற்பது சாந்திகம்; பூமியில்விழு

முன் தாமரையிலையிலேற்பது பௌட்டிகம் பூமியில் விழுந்த பின் எடுப்பது காமதம்; இதில் சாந்திகம் உத்தமம் பொட்டிகம் மத்திமம். சாமதம் அதமம் என்றும் சிவாகமாதி ஓதுதலால் உத்தமமான சாந்திகத்திலேனும் மத்திமமான பௌட்டி கத்திலேனும் கொள்கை முறையாம். இவ்விதிப்படி சத்தியோசாத மந்திரத்தால் யெடுத்து மேலுள்ளவழும்புகளை நீக்கி நடுவிலுள்ள கோமயத்தைக் கொண்டு அதனில் விதிப்படி தாபிக்கப்பட்ட பஞ்சகவ்யத்தை வாமதேவமந்திரத்தால் வார்த்து, அகோர மந்திரத்தை யுச்சரித்துப் பிசைந்து அம்மந்திரத்தினலேயே உருண்டைசெய்து பதரைப்பரப்பி அதன்மேல் தற்புருஷமந்திரத்தினல் வைத்து, சிவாக்கினியையுண்டாக்கி அதனல் தகனஞ்செய்க நித்தியாக்கினிசெய்பவராயின் அந்த அக்கினியால் விளைவிக்கலாம் ஒரே நாளில் கோமயத்தையெடுத்து உருண்டைசெய்து சிவாக்கினியால் தகிக்கவேண்டும்; இப்படியன்றி உலரவைத்துத்தகித்தலுமாகும். அவ்விபூதி நன்ருக விளைந்ததை யறிந்து, கருநிறம், செந்நிறம், புகைநிறம், பொன்னிறமுள்ள விபூதிகளைதள்ளி நல்லதைப் பார்த்து, ஈசானமந்திரத்தை யுச்சரித்து எடுக்கவேண்டும். இவைகளில், கரு நிற விபூதி வியாதியையுண்டாக்கும். செந்நிற விபூதி கீர்த்தியைப்போக்கும் புகைநிற விபூதி ஆயுளைக்குறைக்கும் பொன்நிற விபூதி சம்பத்தைக் கொடுக்கும். வெண்ணிற விபூதி அளவிலாதபுண்ணியத்தை விளைவிக்கும். அவ்விபூதியைப் பரிசுததமாகிய புதுவஸ்திரத்தினல் வடிகட்டிப் புதியபாண்டத்தில் எடுத்து விபூதி காயத்திரியை உச்சரித்து பரிசுத்தமான இடத்தில் கொண்டுபோய்வைத்து, மல்லிகை, முல்லை, பாதரி, சிறுசண்பகமுதலிய நல்லவாசனையுள்ள புஷபங்களை எடுத்து சந்தியோசாதமந்திரத்தினல் அதினுள்ளே போட்டுபுதியவஸ்திரத்தினல் அதன் வாயைக்கட்டி இதுவே நமது திரவியம் என்றெண்ணி நாடோறும் சிவாகமத்தில் விதித்தபடி சிவமந்திரததினல் எடுத்துத் தரிக்க வேண்டும். இதில் பிராமணர் முதலிய நான்குவருணத்தாரும் முறையே ஒரு கழஞ்சு விபூதி கொள்க (ஒரு கழஞ்சு என்பது பன்னிரண்டு பணவிடை யுள்ளது) இதுவே கற்பம் என்று சிவாகமாதிகளும் தணிகைபுராணம், பேரூர் புராணம் கடம்பவனபுராணம் சைவசமய நெறி முதலியவைகளும் விரித்தோதுதலினல் இவ்ரஞ்சிதனில் விரித்தோத அஞ்சி விடுத்தலம். (தொடரும்).

தி. பட்டுசாமி ஓதுவார்.
சந்நதி வீதி திருவண்ணுமலை.

இரஞ்சிதரத்னமாலா.

தலைவிதியும் முன்யோசனையும்:

1. ஐயோ தலைவிதியே! இப்படியா முடிந்தது காரியம்,

ஐயோ ! எவ்வளவு கஷ்டப்பட்டு முடித்தேன். சிறிது முன் யோசனையோடு இதைச் செய்திருந்தால் இப்படியாகுமா ? என்று யோசியாமல் செய்து முடித்தகாரியம் பழுதானமை குறித்து வருத்தப்படுகிறான் ஒருவன். விதியென்செய்யும் ? யோசியாமல் செய்ததை விட்டு விதி விதி யென்றால், என்னபலன் ?

2. குருட்டு அன்பு, குருட்டு விரோதம்.

ஒருவன் மேல் குருட்டு எண்ணமாக ஒருவனுக்கு எண்ணம் உதிக்குமானால், அவன் சிறிதாவது தனது எண்ணத்திற்குரியவன் பிற்காலம் செய்வதை எண்ணமாட்டான் எல்லாவற்றையும் தனது எண்ணத்திற்கநுகூலமாகவே அர்த்தம் செய்துக்கொள்ளுவான். உதாரணமாக, ஒருவன் மேல் மிகுந்த அன்புவைத்து விட்டால், அவன் செய்யும் செயல்கள் உத்தமெனத்தோன்றும் மற்றொருவன் அவனைப் பற்றி ஏதாவது குறைகூறினும் ' சே ! சே ! அவன் அப்பேர்பட்டவனல்ல ! இதையவன் செய்தேயிருக்கமாட்டான் என்று உறுதி கூறுவேன்' என்பான், அது உண்மையென்று தெரிந்து விட்டால், அவன் செய்ததற்கு நல்லவியாக்கியானம் ஒன்று கொண்டுவருவான.

தன் குழந்தை மற்றொரு குழந்தையை யடித்துவிட்டால், சிரிக்கிறான். வேறு குழந்தை தன் குழந்தையையடித்துவிட்டால் அதை மிரட்டுகிறான். அல்லது அடிக்கிறான். ஏன் ? தான் கொண்ட குருட்டு அன்பே ! காரணம் இம்மாதிரியே, ஒருவனிடம் கெட்ட எண்ணமும் விரோதமும் வைத்துவிட்டால் அவன் செய்வதெல்லாம் கெட்டதாகவே தோன்றும். அப்பொழுது யாராவது தனது விரோதியைப்பற்றிக் குறைகூறின் ' அந்தப்பயல் செய்திருப்பான். அவன் சுபாவமே அதுதான் என்று கூறிவிடுகிறான. என்னே குவலயக் கூத்து.

3. நம்பிக்கை.

நம்பிக்கை நலந்தரும் நம்பினால் வம்பில்லை. ஆனால், எதையும் எவரையும் நம்பிவிடக்கூடாது, நம்பிக்கைவிடும் பாதகரிடம் நம்பிக்கை விடவேண்டும். கடவுளை நம்புதல் அவசியம். ஆதனாலேற்படும் நன்மைகள் பல மருத்துவனையும், புருஷனையும், பெண்சாதியையும், பிள்ளையையும், தாய்தந்தையையும், குருவையும், உண்மைநட்பாளனையும் நம்புதல் வேண்டும். தராதரம்பார்த்து மற்றவர்களை நம்ப வேண்டும். ' கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இது நிச்சயம்

4. மதிப்பு.

மறைவாயிருக்கும் வரையில் மதிப்புண்டு, இல்லை யெனில் உண்மை வெளிப்பட்டுவிடும் வைத்தியன் எதையாவது பொடியை எடுத்துப் பெரிய பெரிய பெயர்களைப் பினைவித்துக் கொடுத்து வரும்

வரையில் மதிப்பு. கொடுப்பது கடுக்காய்ப்பொடி என்று தெரிந்து விட்டால் 'பூ' என்று அலக்ஷியம் செய்து விடுவார்கள்.

புஸ்தகம், வாசிக்கும் வரையில் அந்த புஸ்தகத்திலே பெரிய தொருமதிப்பு பணங்கிடைத்ததே இல்லையோ, கம்பெனிக்குகார்ட்டு வீ பி வந்து உடைத்து உள்ளேயிருக்கும் புஸ்தகத்தை வாசித்து முடித்துவிட்டால் இவ்வளவுதானு என்று போய்விடுகிறது,

ப்ருங்காமலக தைலம் மூளைக்குக்குளிர்ச்சி உண்டாக்கும் உண்டாக்கும் என்று சுதேசமித்திரனில் அரைப்பக்கம் விளம்பரம் கேட்லாக்கைப்பார்த்தாலோ அபாரமான நற்சாட்சி பத்திரங்கள் வீ பி தரவழைத்து உடைத்து பார்க்கிறவறையில் தடபுடல் மிருந்த ஆத்திரம் உடைத்துப்பார்த்தால் சிறிய சீசாவில் உள்ளூர் மருதநாவி தன் தாயார் செய்யும் நெல்லிக்காய்த்தைலம் போலொரு தைலம் இருக்கிறது ஆனுல் வாசனைகுறைவு, அதைகண்டவுடனே 'சே ! இதுதானு நம்மூரில் வண்டி வண்டியாக ஏத்தலாமே' என்று சொல் லிவிடுகிறோம்.

'தூரத்துப்பச்சை கண்ணுக்கழகு' என்பது பழமொழியல்லவா ? மறைவிலிருக்கும் வரை மதிப்பு, இதை நோக்கியே' உடையது விளம்பேல்' என்றனர் போலும், கி, வா, ஜெகந்நாதன்.

மோகனூர்.

தொழிலில் துர் அபியான கண்டனம்.

சகோதர சகோதரிகளே !

இப்புண்ணிய பாரதபூமியின்கண் மத அபிமானம், பத்திரிகை அபிமானம், இன்னும் மற்றும் ஜீவகாருண்ய அபிமானமுள்ள காலம் மங்கி துற்-அபிமானம் துற் செய்கைக்கி இடமாய்விட்டது. அந்தோ! அக்காலத்தில் இப்புண்ணியபூமியில் இருந்த நற் அபிமானப் பிரகாசம் மங்கி மாண்டு கிடக்கின்றதைப் பார்த்தால் ஓர் வலியவன் எளியவன் ஓர் குற்றமும் செய்யாதிருக்கும்போது வலியவந்து வம்புக்கிழுக்கின்ற பாதிரியன்றோயிருக்கின்றது. இப்பரதகண்டத்தில் வேரானறியிருக்கும் துற்செய்கைகளுக்குயாம் செய்வதென்ன.

(தண்டலையார் சதகம்.)

" வைத்திடினும் வாழ்ந்திடினும் யின்பம் துன்பம்
வந்திடினும் வம்பு கோடி செய்திடினும்
தண்டலை நின்னெறியாதஞ் செயலன்றே
தெழிவதல்லால் மெய்தவிற றவர்செய்தா
றிவர் செய்தார் றெனநாடி வெறுக்கலாமோ
எய்தவர்தம் மருகிருக்க வம்பை நொந்தகரு
மம் மென்ற வியம்புவீறே "

என்ற ஆன்ரோர் வாக்கின்படி (சூது) என்பது அறியா கலங்க மற்ற பரமசாதுவாகிட நித்திய திங்கள் தோறும் நினைவெனும் அறிவுப்பிரகாசத்தை விளங்கச்செய்யும் மழலைமொழியுடைய " ரஞ்சிதனை " சில துற் அபிமானமுள்ள பத்திரிகைகள் துற் நினைவை மனதில் நினைத்து மானைப்பார்த்து கழுதை பொருமைபட்டது போல் தூஷமசெயல் செய்ய நினைத்தும், செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

" கற்றவர்க்கு கோபமில்லை கடந்தவர்க்கு சாதியில்லை
கருணைகூர்ந்த நற்றவர்க்கு விருப்பமில்லை
நல்லவர்க்கு ஒருநாளும் நரகமில்லை கொற்றவர்
கடிமையில்லை தண்டலை நீன்
மலாபாதம் கும்பிட்டேக்தப் பெற்றவர்க்குப்
பிறப்பில்லை பிச்சை சோற்றினுக்
கிள்ளை பேச்சுத்தானே " (தண்டலையார்)

என்றபடி நண்பர்களே ! விழியுங்கள் கலங்கமற்ற ரஞ்சிதன் பேரில் கவலைகொண்டு தங்களால் இயன்ற சந்தாதாரர்களை சேர்ப்பதுமன்றி நற்ஜீவகாருண்யத்தை தேடுங்கள்.

" தொன்றிற் புகலோடு தோன்றுக
அஃதில்லாற் தோன்றயிற் நன்று "

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி ரஞ்சிதன் எனும் மராமானது எப்பொழுதும் குறைவிலாகிளையும், பழமும், விழுதும் பெற்றும் பறவை இனங்கல் சூழ்ந்து நற்கருணை நிழல் பெற்றுவாழ்க வேண்டுகிறேன். தூஷமச்செயல் செய்யும் செய்ய நிந்தித்தபத்திரிகைகள் (தன்வினை தன்னைச்சுடும்-ஓட்டப்பம் வீட்டைச்சுடும்) என்ற நிலையை அனுபவித்து இனி துர் நினைவை நீக்கி ரஞ்சிதன் நண்பர்களாக வேண்டுகின்றேன். கலங்கமற்ற ரஞ்சினை அன்புடன் ஆதரிக்கும் நண்பர்களை ஆனந்தத்தோடு வந்தனமளிக்கின்றேன்.

" குற்றத்தை நீக்கி குணத்தைக் கொள்வது கற்றவர்க்கழகு"
எவ்வித தொழிலும் ஒற்று வாழவது உரிமைக்கழகு.

ரஞ்சிதன் அன்பன்; எம். வேலு,
கிருஷ்ணயில் மெர்ச்சென்டு புதுக்கோட்டை.

பொருமை.

பிறர் சுகமாயிருப்பதை சகிக்கமுடியாத குணமே பொருமையெனப்படும். பிறர்மேல் அசூகைப்படுங்குணத்திற்கே பொருமை என்று சிலர் சொல்லுவர். இப்பொருமை குடிகொண்டவன் என்றும் பிறர்க்குத் தீங்குசெய்யவே கவனிப்பான். பெரியோர்கள் என்ன நீதிகளை எடுத்து ஓதினாலும் கொடுஞ்செயலைச் செய்யவே எத்தனிப்பான். இங்கு துர்யோதனனைக் கவனிக்கதக்கது. இப்பொருமை

யானது குடிகொண்டவனிடத்தில் இலட்சுமிபோய் அக்காள் குடி கொள்வாள். இவனைத்தூஷியாதவர் யாருமில்லை.

இவனுக்குச் சந்தோஷம் என்பதே கிடையாது. இவன் செல்வனுயினும் நாளடைவில் குறைந்து உண்ணசோறும், உடுக்கத்துணியும் இல்லாத தரித்திரத்தைக்கைக்கொண்டுத் துன்பப்படுவான். இவ்வாறு இம்மையில் துன்பப்பட்டு மறுமையிலும் சகிக்க முடியாத துன்பங்களை யனுபவித்து என்றும் மீளா நரகத்தில் வீழ்ந்து வருந்துவான் என்பது திண்ணம்.

"ஊருடன் பகைக்கின் வேறுடன் கெடும்" என்ற நீதி மோழிப்படி தான் பிறந்த தேசமாகிய தாய்நாட்டிலுள்ளவர்கள் சுகமாயிருத்தலைக்கண்டு சகிப்பானே? இவனை உலகத்தவர் தேசாபிமானி என்று உரைப்பார்களா? இவனை ஜீவகாருண்யன் என்று சொல்லுவார்களா! அந்தோ இவனை உலகம் வெறுப்பதல்லாமல் கடவுளும் வெறுத்துத்துன்பப்படுத்துவரே!

சிலர் "தம்மினுங் கற்றாரைநோக்கிக்கருத்தழிக" என்று குமரகுருபரர் நீதி நெறிவிளக்கத்திற் கூறியுளாரே அவ்வாறு கற்றவர்களைப்பார்த்து மாணாக்கர்கள் பொறாமை படலாம். ஆனல்; அது என்றும் நீடித்திருக்கலாகாது. அன்றியும் பிறர் சுகமாயிருப்பதைக் கண்டும் பொறாமைபடலாகாது. இக்கொடிய பொறாமையைக் கண்டதும் அதை அன்றே வேரொடுகளைந்து விடுவதே கற்றதினல் அடைந்தபயனகும், அதுவே உத்தமகுணமாகும். அவ்வாறு செய்யின் அவன் இம்மையிலும், மறுமையிலும் என்று மழியாத இன்பத்தைப் பெற்று உலகம் போற்ற நன்மையடைவான்.

இன்னும் பொறாமைக்காரன் என்னும் சாத்திரத்தில் என் கண் ஒன்று அழியட்டும், பக்கத்து வீட்டுக்காரன் கண்ணிரண்டும் அழியட்டும் என்று எண்ணினனல்லவா, கடைசியில் அவன் வேலைக்காரர்கள் அவன் பொறாமையைக்கண்டு அவனைக் கொன்று அவனது பொருளையும் கொள்ளையிட்டார்களல்லவா? அம்மாதிரியே இப்பொறாமையுடையவர்கள் அடைவார்கள் என்பது திண்ணம் இன்னும் இந்த பொறாமையை வித்வான்கள்பாற் காணலாம். இதற்கு தக்க சாட்சி நக்கீரர் பெருவிபாகியடைந்ததே இந்திபசரித்திர கதைகளில் பிறசித்திப்பெற்ற ஜெயச்சந்திரன் கதையைக் கவனிக்கத்தக்கது. இவனது பொறாமையாலல்லவா! மருமகனன பிருதிவி ராஜன், மகள் ஸம்யுக்தை இவர்கள் அழிய நேர்ந்தது மறுவருடத்தில் இவனது தேசத்தை இழந்ததல்லாமல் உயிரிட நேர்ந்தது. இன்னும் இவனது பொறாமையாலல்லவா டில்லிமாநகரில் இந்து அரசாட்சி அடியோடு அழிந்து முகம்மதிய அரசாட்சி ஏற்பட்டது. அந்தோ! யார்தான் இக்கொடும் பொறாமையை நாடுவர்.

ஆகையினால் நாம் பிறர் நம்மை துன்பத்திற் குட்படுத்தினாலும் அதைப் பொருத்து அவர்களுக்கு உதவி செய்யவே எதிர் பார்த்திருக்கவேண்டும். நந்தேயத்தில் இந்தப் பொறுமை பெரும் பாலோரிடத்து காணப்படுகின்றது. இனி இந்தக்கொடிய பொறுமையை அடியோடு விட்டு "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற நீதி மொழிப்படி என்றும் நன்மையைத்தரா நிற்கும் "பொறுமை" என்பதைக் கைக்கொண்டு வாழ்ந்து இன்பமடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக! சுபம். எஸ். என். இராமு.

கூறைநாடு.

சிறுவர்க்கான

பக்கங்கள்.

(107 ம் பக்கத் தொடர்ச்சி).

அன்று சாயங்காலம் வரையில் அவர்கள் அத்தோப்பிலேயே இருந்தார்கள்.

தினகரன் மேற்கு மலைகளுக்குப் பின் மறைந்தான். உடனே பாட்டியார் குழந்தைவேலுவைப் பார்த்து, "குழந்தாய்! நாம்வெகு நாழிகையாக ஈண்டு இருந்து விட்டோம். இனி இல்லம் ஏகவேண்டும். ஆகையினால், எழுந்திரு! போகலாம்;" என்றார் குழந்தை வேலுவும் குதூகலத்துடன் எழுந்திருந்தான். உடனே அவ்விருவரும், தோட்டக்காரனிடமிருந்து உத்திரவு பெற்றுக்கொண்டு, வீட்டைநோக்கிப் புறப்பட்டனர்.

இவர்கள் எந்தவழியாக அகத்திற்கு ஏகினார்களோ அந்த வழியில் ஒரு சிவன் கோவில் இருந்தது. அச்சிவாலயத்தைக் குறுகியதும், குழந்தைவேலு தணக்குன்றும் கிழவியாரைவிளித்து, "பாட்டி இப்பொழுதுதான் தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆகையினால், வாருங்கள்! கோவிலுட்சென்று, கடவுளையும் தரிசித்துக் கொண்டு செல்வோம்; என்றனன். அவரும் அதற்குடன்பட்டு, ஆலயத்திற்குள் அடியெடுத்து வைத்தனர். அவருக்குப்பின்னர் பையனும் புகுந்தான்.

புகுந்ததும், அவனுடைய கால் எதிலோ தடுக்கப்பட்டது. உடனே, என்ன வென்று குனிந்து பார்த்தான். தரையில் ஏதோ சில எழுத்துகள் செதுக்கப்பட்டிருந்தன. உடனே, அவன், ஆச்சரியமுற்று, அதை ஔவையாருக்கு அறிவித்தான்.

ஔவையாரும் அச்சமயமே திரும்பி அதனைக் கவனித்தார். தமிழ் எழுத்துகளில்.

" பிரபவ வருஷம், தை மாதம் இருபத்தைந்தாம் தேதி, கணபதி தீக்ஷதர் அவர்களால் உதவப்பட்டது இது என்று செதுக்கப்பட்டிருந்ததைக் கண்டார். உடனே, குழந்தைவேலு, " குணக்குன்றமே! இவ்வெழுத்துகள் செதுக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆயின? இவ்வாலயத்திற்கு இது உதவப்பட்டு எவ்வளவு கோடைகள் ஆகின்றன? என்று கேட்டான்.

அதற்கு ஔவையார், " அன்பார்ந்த குழந்தைவேலு இந்தக் கோவில் கட்டி எத்தனையோ வருஷங்களாகி விட்டன. இது எப்போது கட்டப்பட்டதோ, அப்போதே இக்கல்லும் தர்மமாகத் தரப்பட்டிருக்கிறது, பதிலிருத்தனர்.

இதைக்கேட்டபையன், பாட்டி! எத்தனையோகோடைகளுக்கு முன் செதுக்கப்பட்ட இவ்வெழுத்துகள், இன்னும் தெளிவாகக் காணப்படுகின்றனவே! நாம் சுவடிகளில் எழுதும் எழுத்துகள் கூடச் சில வேளைகளில் தெரியாமல் போகின்றனவே! இது எவ்வளவு ஆச்சரியம் பாருங்கள்! கடலாற் சூழப்பட்ட எழுத்துகளைப் போல் எப்போதும் விளங்கிக் கொண்டிருப்பவைகள் வேதங்களையும், கடவுளையும் தவிர எவையுள்ளன? வென்று ஆச்சரியத்துடன் கேட்ட அன்னானை, ஔவையார் விளித்து, " இப்பரந்த பாரில் நம்மால் ஒருவர்க்கு நாம் செய்த உபகாரம், இக் கல்மேல் எழுத்துப்போல் மங்காமல் விளங்கிக் கொண்டே இருக்கும். உதாரணமாக இவ்விஷயம் உரைக்கின்றேன் கேள். நல்லவரான இருஷிகளுக்கு இடுக்கணை விளைவித்துக்கொண்டிருந்த இராக்ஷர்களை அதம் செய்த, இராமன் முதலியவர்களுடைய பெயரும், உபகாரமும் கல்மேல் எழுத்துப் போல் காண்கின்றன; என்றனர்.

• அவர் சொல்லி வாய்மூடினாரோ இல்லையோ, பையன், அது வாஸ்தவந்தான் அம்மா! நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப் போல் காணும்' என்றீர்களே! அது வாஸ்தவமாயிருந்தபோதிலும், ஒரு சந்தேகம் எனக்கு உதிக்கின்றது. * * * நாம் எல்லாருக்கும் உபகாரம் செய்யவேண்டியது அல்லவா நியாயம் அப்படியிருக்க, ஏன் நல்லவர்களுக்கு மாத்திரம் ஒத்தாசை செய்ய வேண்டும்? நல்லவர்களல்லாதவர்களுக்கு ஏன்உதவி புரிதல் ஆகாது என்றனன்.

ஔவை, "மகனே! வாஸ்தவந்தான். நல்லவர்களல்லாதவர்கள் ஈவு இரக்கமற்ற நெஞ்சத்தவர்கள். அவர்கள், நீரில் எழுதின எழுத்து, எப்படி அப்போதே மறைந்து விடுகின்றதோ, அப்படியே, ஒருவர் செய்த உபகாரத்தை அந்நிமிஷத்திலேயே மறந்து விடுவார்கள். அதோடு கூட இருந்தாற்றான் எவ்வளவோ மேலானதாயிற்றே ஆனல், அவர்கள அதோடு நில்லாமல்பூனே, தேள் முதலியவைகளைப் போல் அப்போதே அபகாரத்தை விளைவிப்பார்கள். ஆகையினல், நாம் நல்லவர்களுக்குத்தான் உதவி செய்தல் வேண்டும் என்றேன், என்று சொல்லிப் பையன் ஐயத்தை விளக்கினர்.

இவ்வாறு வார்த்தை ஆடினபிறகு, இருவர்களும் கோவிலுக்குள் சென்று பகவானைத் தரிசித்து, "மாற்றறியாத செழும் பசும் பொன்னே!" என்றமெட்டில் பாடி ஸ்துதிக்கிறார்கள்.

பல்லவி.

கண்ணுதற் கடவுளே! கங்கைவேணிச் செல்வனே!
என்னுள்ளத்தினில் வளர் இன்னல் களைந்தருளும் [க]

அநுபல்லவி.

மண்ணிலும் விண்ணிலும் மன்னு உன்னையன்றி
எண்ணேன் வேறு தெய்வத்தை எந்தன்குல தீபமே [க]

சரணம்.

எண்ணு மெழுத்திலிவன் ஏழைபந்தன்னுயேன்
என்னைகாப்பது உந்தன் ஏற்றகடனல்லவோ
வண்ணமகன் வள்ளி மணாளன் மூஷிக
வாகனன் றாயுமையை வலப்பக்கம் பெற்றிட்டவா [ங]

பிறகு வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

வழியில் ஔவையார் கீழ்வரும் செய்யுளைச்சொல்லி பையனை பாடம் செய்யும்படி சொன்னர் பையனும் அப்பாட்டைச் சந்தோஷத்தினல் உடனே பாடம்பண்ணிவிட்டான் வீட்டிற்குப்போய்த் தன் தாயாருக்குச் சொல்லிக்காட்டினன். அந்தச் செய்யுளை நீங்கள் கேட்க ஆவலுறுவீர்களென்றோ? ஆகையினல் அதைக் கீழே எழுதியிருக்கிறேன். குழந்தை வேலுவைப் போல நீங்களும்பாடம் பண்ணுவீர்கள் என்று எண்ணுகிறேன்.

செய்யுள்.

"நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் * *
கல்மேற் எழுத்துப்போர்காணுமே— அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்குநேர்."

லா. சே. கந்தசாமி,
லால்குடி.

71, East Kadalangudi street
Kumbakonam. 13-5-24.

To The Manager, Ranjitha Bodhini Office.
Sowcarpet Madras.

Dear Sir,

Your magazine gladdened my heart with so much force that I am obliged to bestow you on many blessings. This Journal is very apt to be called as Ranjitha Bodhini, for it give's a lifelong fountain of innocent and exalted pleasure; a source of animation to friends when they meet and able to sweeten solitube' with the simplicity of its language and its pious and note-worthy contents. It not only gives a striking contract with other magazines for its cheapness but also helps the public there by with a greater degree. Even an atheist in his first readind of Ranjitha Bobhini will wipe off his foolish notions and ability to get himself into the Eternal All embrasing Bliss you clasified honey! Patriotic and kindhearted Ranjitha! God will surely give you prosperity and long and healthy life to the publisher.

I am,
Dear Sir,
Yours Sincerly,
S. Narayanaswamy Naidu,
Government College,
Kumbakonam.

நேஞ்சுருகப்பேசும் ரஞ்சிதா !

இங்கும் அங்கும் சென்று உலாவி கண்டவர் களிக்க கொஞ்சி கொஞ்சிப் பேசும் ரஞ்சிதனே உன்னைககண்டு யார்தான் எடுத்துடன் வாக்கு சாதுர்யத்தையும் புத்தி கூர்மையும் சாமர்த்தியத்தையும் கேட்டு சற்றுமயங்கி ஆனந்தித்து உனனைவிட்டுவிலகவகைபறியாதும் மனமில்லாமலும் தபங்கார் வயது இரண்டேயான குழந்தையாயிருப்பினும் ” மூர்த்தி சிறிது கீர்த்தி பெறிது ” என்றவாறு நீ உன்னுடைய பராக்கிரமங்களுடன் உன்னை நம்பி எதிர் பார்க்கும் உன் சினேகிதர்களை திங்களன்று தங்கலின்றி மங்களமாகச்சென்று அவருடன் உன் ஞானவேதங்களையும் பல இங்கிதங்களையும் தற்கால விசேஷங்களையும் எடுத்துக்கூறி அவர்களை களிப்படையச் செய்கின்

ளுய். மஞ்சத்தை விட்டு இறங்கவும் வகைபறியாதவர் பாலனுடைய வயதாயிருப்பினும் ஏ பாலச்சந்திரா! அஞ்சலின்றி குஞ்சரம்போல் வெளியில் சென்று உலாவும் ரஞ்சிதனே! எடுத்தகாரியத்தில் துஞ்ச லின்றி வெற்றிபெறும் தூயனே! உனக்கு கஞ்சிவளர் வரதனும் கஞ்ச மலர் வாசிகளும் துணை. சென்றமாதம் உன்னைக்கண்டு உன்வார்த் தைகளைக்கேட்டு ஆனந்தித்ததின்பேரில் இப்பொழுது என்னு டைய சிற்றறிவிற் கெட்டியவாறு சிலவிஷயங்களை உன்போஷகரி டம் (சம்மந்த முதலியார்இதன்பால் கூறியுள்ளேன். அதனைஅவர் மாணிக்கவிலாச அச்சியந்திரசாலையில் உனக்கு அவ்விஷயங்களைநன் ளுய் மனதில் பதியப்படுத்திமறுதிங்கள் நீ சென்று உன் சினேகி தர்களுடன் பேசும்பொழுது இதனைக்கூறி அவர்களையும் ஆனந்திக் ச்செய்யும்படி ஷை முதலியாரவர்கள் செய்வார்களென்று நம்புகி றேன்,

ரஞ்சித நேசன்.
சா. நாராயணசாமி நாயுடு.
கல்லூரி திருக்குடந்தை.

காதலால்—துக்கமுண்டு யீஸ்பரியால் நன்மையடைந்த

சாந்தவதி.

(154 ம் பக்கத் தொடர்ச்சி).

இருளும் வரவர அதிகரித்துக்கொண்டே வந்தது அநேகம் புஷ்ப விருக்ஷங்களும் மையிறவனக விருட்சங்களும் நன்ளுக செ ழித்து தழைத்து யிலைகளினுல் மூடப்கிபற்ற பெரிய மரங்கள் யேரா ளமாக நிறைந்த நந்தவனமாகச் சிரிது தெரிந்த செவ்வானத்தின் பிரகாசமுமமைந்து அந்தகாரம் யெங்கும் நிறைந்து பார்வைக்கி பயங்கரமாய் யிருந்தது,

ஆகாயத்திலும் யெங்கு பார்த்தாலும் யிருளானது கவிந்து கொண்டு வந்ததினுலும், கருமேகங்களும் வானத்தினிடமாக அன்று தினம் நிரைந்திருந்ததினுலும், நக்ஷத்திரங்களின் ஒளிகூட தெரிய வில்லை. அதுசமயம் அங்கு யாதொரு சப்தங்களுமில்லாமல் நிர் சப் தமாய் யிருந்தது கல்நெஞ்சமுள்ளவராயிருந்தாலும் இப்பெரிய நந்த வனத்தில் சந்திரகாலவேளையில் அங்குயிருக்க பயமுராமலிருக்க மாட்டார்கள்.

ஆனுல் பட்சிகள் யெல்லாம் தம்முடைய பேடைகளுடன் பகல் யெல்லாம் யிரைதேடி மாலைப் பொழுதானவுடன் அதுகளின் கூடு களுக்கு செல்லும் தொனிகளும் தனனுடைய குஞ்சுகளுக்கு தான்

கொண்டுவந்த யிரையை கொடுக்க அதுகள் அந்தயிரையைவேண்டாமென்றாலும் தாய் பரவைகள் அவைகளுக்குச் சமாதானம் செய்யும் ஆர்ப்பாட்டமும், சிலது பரவைகள் பரந்து செல்லும் சப்தங்களும், அதுகள் ஒன்றோடொன்று நயன பாஷையில் பேசிக் கொள்ளும் சப்தங்களும் வெகு யினிமையாகயிருந்தது.

அங்கு சகிக்கொணாத ஆழ்ந்தகவலையே பெரிதாக கொண்டவளும் தன்னுடைய துயரத்தை யாற்றுவாறன்றிதானே அழுதுபுலம்பி தவிக்கும் இயற்கையுள்ளவளுமான மாதானவள் யேதோ ஒனரை மனத்தில் நினைத்து கொண்டவளாய் பெருமூச்செரிந்து அயர்ந்து. சோர்ந்து முன்னிலும் அதிகமாக அலரி துடிதுடித்துதொப்பென்று கீழேவிழுந்து வாய்விட்டு கதரி பகவானை நினைத்து பரதவித்து புலம்பத்தொடங்கினள்.

ஏ பார்வதி சமேதா! அனாதரட்சகா! ஆபத் பாந்தவா! பரம தயாள! யேளைபங்காளா! கருணாகரா! உன்னை நம்பி உன்பாதமே கெதியென்ற பக்தகோடிகளுக்கு அருள் தந்து கார்த்து ரட்சிக்கும் முதர்க்கடவுளென்று ஆகம புராண சாஸ்திரமுதல் முன்னோர்கள் யெல்லாம் முரையிட்டிருக்கிறார்களே.

மார்க்கண்டன் முதல் உன்னையே சதமென்றநம்பின அடியார்களுக்கெல்லாம் நீ பக்கத்துணையாக யிருந்து கார்த்து ரட்சித்தாயென்று வேத நூல்களிலும், பல சாஸ்திரங்களிலும் சிலர் சொல்லவும் கேட்டிருக்கிறேன்.

அவ்வாறெல்லாம் நீ பக்தசிகாமணிகளை கார்த்திருக்க சிறுபேதையாகிய நான் அடிக்கொம்புமற்று பிடிக்கொம்புமற்று, சேற்றில் நட்டகம்பமாய் ஆகரிப்பாரன்றி பாவிகளின் கையில் சிக்கி தப்பவழியின்றி பரதவித்து வாடி புலம்பும் சப்தமானது நின்செவிக்கி யேரவில்லையா அல்லது உன் மனமானது கருங்கல்லா ஆதிமூர்த்தியாகிய உன்னுடைய விழிகளுக்கு யேழைபடும் கஷ்டங்கள் தோற்றப்படவில்லையா பெண்ணென்றால் பேயும் யிரங்குமே யென்று பழமொழி சொல்லுவார்களே அவ்வசனத்தைக்கூட நீ கவனிக்கவில்லையே யென்னைப்போல் பக்கத்தில் ஓர் பெண்ணையும் சடாபாரத்தில் ஓர் பெண்ணையும் வைத்திருக்கின்றாயே அவர்களின் ஞாபக குடர்ச்சியிலாவது யென்னுடைய பரிதாபநிலைமை உன் மனதில் படவில்லையா அல்லது அம்மாது சிரோன்மணிகளாவது நின்னிடம் சொல்லவில்லையா.

என்னையிவ்வண்ணம் சிரையில் வைத்து என் வாழ்நாளெல்லாம் வீணாளாகவேணுமென்று கருதி, யிக்கெதிக்குள்ளாக்க யென்னைப் படைத்து மன்னிலேயில் பெங்களநாட்டையும் அபகரித்து தாய்தந்தை தமையன் மார்களையும் சூது செய்து துரத்தியடித்த சண்டாளர்கள் செய்த குற்றத்தையும் நீ பார்த்திருக்கின்றாயே அவர்களை தண்டித்து யென்னை ரட்சிக்கக்கூடாதா அல்லது நீயும் அவர்களுக்கு அனுகூல

மாய் இருந்துக்கொண்டு என்னை பரதவிக்கபார்க்கின்றாயா வென்று தன் வாய்க்கிவந்தவாரெல்லாம் புலம்பிக்கொண்டிருந்தாள்.

அது சமயம் பின்புரத்தில் பெலமான சப்தம் ஒன்றுகேட்டது அது மனிதர்களுடைய சப்தமாக திரும்பிப்பார்த்தாள் இவள் திரும்பிப்பார்க்கும் சமயம் முன்வேகமாக வந்துக்கொண்டிருந்த சிம்மங்களிரண்டும் வாசலண்டை நின்றுகொண்டிருந்த ஓர் மனிதனை அடித்து வீழ்த்தியிவளை நோக்கிவிரைந்தோடிவந்தது.

இதைக்கண்டவுடன் படபடத்து திடுக்கிட்டு அம்புலங்களும் சிதருண்டு யிவளுடைய ஆவியே போய்விட்டவள் போல் பிரஞ்ஞையற்று சோர்ந்து கீழே விழுந்துவிட்டாள் சாதாரணமாகவே ஓர் சிறு மிருகங்களை மனிதர்கள் நேரில் கண்டு விட்டால் அவர்களுடைய மதி கலங்கி திகைத்துவிடுகிறார்கள் அதிலும் மிருக ராஜனாகிய சிம்மததைக்கண்டு யிப்பெண்மணி பயமுற்று கீழே விழுந்தது ஆச்சரியமில்லை. நிற்க,

அம்மாதானவளும் பயத்தையே மனதில் கொண்டிருந்தவளாகச்சே மிகுதியான பயமேலிட்டு சோர்ந்து விட்டாள் கீழே விழுந்ததும் பிரஞ்ஞையற்று ஒரு நாழிகைவரையில் யின்னது நடந்தது யின்னத்திற்காக நாம் கீழே விழுந்தோம் நாம் யின்ன நிலைமையிலிருக்கின்றோமென்று தெரியாதவளாய் அயர்ந்து யிருந்தாள் சந்தி காலவேளையானதினாலும், குளிர்ச்சியான நேரமானதாலும் தென்றல் காற்றானது முகத்திலபடபட கொஞ்சகொஞ்சமாக ஸ்மரணைவந்தது வரவர அவளுடைய பூருவானதன்னரிவும் வந்து விட்டது. ஆனால் அவள்முன் கொண்டிருந்த கவலைகள் யெல்லாம் அதுசமயம் ஞாபகத்தில் யில்லை. தனக்கு பூருவான நினைவு வந்தாலும் அவளுடைய விழிகளை திரந்து பார்க்காமலே மவுனமாயிருந்தாள,

அப்பொழுது தனக்கு முன்னிலும் பின்னிலும் இரண்டு உருவங்களிருந்து தேகத்தில் ஓரசும் பாவனையாய் தென் பட்டது. மெள்ள கண்களை திரந்து. பார்த்ததால் உடனே யமனைக்கண்டஉயிர் போல் நடுநடுங்கிவிட்டால் இதையறிந்த பக்கத்திலிருந்த உருவங்கள் தங்களுடைய நயனபாஷையில் சைகை செய்யவேயிவளும் ஒருவாறு மனதைத் தேற்றி தைரியத்துடன் சமாதானமடைந்து யெழுந்து உட்கார்ந்தாள் பக்கத்திலிருந்த உருவங்கள் யாதென்றும் வாசகர்கள் ஐயமுறலாம் ஆனல் அவைகளே முன்யிவளை நாடிவந்த சிம்மங்கள்.

மனிதர்களிடத்தில் பழகியபடியாலும் ஒருவரால் தூது அனுப்பப்பட்டபடியால் சிதையினிடத்திலும் அனுமான் ஒடுங்கிநின்ற பாவனையாய் இவளிடத்தில் அவைகள் பணிந்து சாந்தமாய் நின்றதுகள்.

அம்மிருகங்கள் இவள் யெழுந்து உட்கார்ந்ததும் கீழேசாய்ந்து பணிந்து வாலையடக்கிக்கொண்டு யிவள்முகத்தோடு முகங்களை வைத்தும், குதித்தும் விளையாடியும் சந்தோஷமாய் நின்றதுகள் அதில் ஒன்றின்

வாயில் ஓர் கடுதாசி துண்டிருந்தது அதை மணிவரக அம்மாதினிடம் குடுத்து பின்வருவதாக சைகைச்செய்து வந்தவழியை நாடிச் சென்றதுகள்.

முன்வந்துகொண்டிருந்த கிழமாதும் சிம்மங்களை கண்டவுடன் ஒளித்திருந்து அவைகள் சென்றவுடன் யிம்மாதுக்குச் சமீபமாய் வந்து நின்றாள் முக்கண்ணனின் தோழனாகிய சந்திரபகவானும் இக் கன்னிகைக்கி தேர்தல் சொல்லிவருபவன் போல் கிழ்திசையில் உதயமானான், (தொடரும்,)

நா, சுப சாமினாத உபாத்தியாயர்.
பக்தகவி ஜோதிடர் மாந்தலே பர்மா.

விவசாயத்தின் விதிகள்

எனது அருமைச் சகோதர சகோதரிகளே !

நமது நாட்டில் உள்ள சிலர் இந்த இந்த மாதத்தில் இன்ன இன்னவேலைகள் தோட்டத்திற்கு செய்யவேண்டியது என்று தெரியாதிருக்கின்றனர். ஆகையால் நமது நாட்டிலோ அப்படிக்கில்லாமல் அந்த அந்தமாதங்களில் எது எது தோட்டத்திற்கு செய்யவேண்டுமோ அவைகளை செய்கிறார்கள். ஆகையால் தான் அது அதிகமான பலன்களைத் தருகின்றது.

என் நுட்ப அறிவுக்கு எட்டியமட்டில் நமது ரஞ்சிதன் மூலமாய் வெளியிடத் துணிந்தேன். நாம் ஆங்கில மாதங்களின் முறைப்படியே எழுதுவோம்.

ஜனவரி: இந்தமாதத்திற்கு முன்பாகவே நாம் நமது தோட்டங்களை உழுது, வாய்க்கால் பாசனங்கள் ஏற்படுத்தி, எருவிட்டு விதைவிதைக்க தயாராய் வைத்திருக்கவேண்டும், பிறகு நடமாட பாதைகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும் ரோஜாச்செடிகளுக்கும் பழவர்க்க மரங்களுக்கும் வெய்யில் ஆவசியமானதால் அவைகளை வெய்யில் இருக்கும்படியான இடங்களில் பயிரிடவேண்டும். காய்ந்தசாருகளையும் இலைகளையும் சரிபடகத்தரித்து ஒழுங்குபடுத்த வேண்டும். பூமிக்குமேல்வரும் கிழங்குகளை மூடுபனிபடாமல் பாதுகாக்க வேண்டும். பிறகு: விதைகளை சரிபடுத்தவேண்டும். திராட்சைப்பழங்களை பழக்கவைக்கவேண்டியிருந்தால் அவைத் ஒரு அறைக்குள் வைக்க வேண்டியது அந்த அறை சீதோஷ்ணநிதி 45 (Forty five degrees) இருக்கவேண்டும். (தொடரும்,)

T. K. Seshagri row.
Trichinopoly.

ரக்தாக்ஷிவருஷத்திய ரஞ்சிதபோதினியின்

திருக்கணித சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342,

கொல்லமாண்டு 1099—1100, இங்கிலீஷ் **1924**ஞு.

ஆனிடீ	ஜூன்டீ ஜூலைடீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	சனி	து 39-23	சுவாதி20-48	அ20-48சி	புண்ணியகாலம்
2	15	ஞா	திர 30-23	விசாக14-8	ம60	பிரதோஷம்
3	16	திங்	ச O22-50	அனு6 கே 59	சித்60	பௌ அவமாகம்
4	17	செ	பௌ11-3	மூலம்51-43	அ51-43சி	வியாபாரம் செய்ய
5	18	புத	பி 1-து53	பூராட45-3	அமி60	ஜேஷ்டபகுளம்
6	19	விய	திரி 45-58	உத்ரா39-33	சித்60	கரிநாள்
7	20	வெ	சது 40-33	திரு35-35	ம35-35 சி	மரணயோகம்
8	21	சனி	பஞ்36-8	அவிட் 33-25	சி33-25அ	கடகாயனம்
9	22	ஞா	சஷ் 34-8	சதை 33-20	சித்60	விவாகம் சுபம்
10	23	தி	சப் 34-13	பூரட்35-10	ம35-10 சி	பிரயாணம் விலக்க
11	24	செ	அஷ்36-13	உததி38-48	அ38 48சி	திரிலோசனபூசை
12	25	பு	நவமி39-45	ரேவதி 44-0	மர60	மரணயோகம்மழை
13	26	விய	தச 44-30	அசுவ50-18	அ50-18சி	வித்தியாரம்பம்
14	27	வெ	ஏகா50-0	பரணி57-25	சித்60	சர்வமத்வ ஏகாதசி
15	28	சனி	துவ55-58	*கிருத் 60-0	அமி60	கிருத்திகை
16	29	ஞா	திர 60-0	4-48	சித்60	பிரதோஷம்
17	30	திங்	சது 7-38	ரோ 12-15	அமி60	மாசசிவராத்திரி
18	1	செ	●அ13-8	மிருக 19-23	சி19-23ம	சர்வத்ர அமாவாசை
19	2	புத	பிர17-50	திருவ 26-10	சித்60	மந்திரம் ஜெபிக்க
20	3	விய	துதி21-58	புனர்32-23	அமி60	ந் திரதெரிசனம்
21	4	வெ	திரி 25-5	பூசம்37-45	ம60	பிரயாணம் விலக்க
22	5	சனி	சது27-3	ஆயில் 42-8	ம42-8அ	பிரயாணம் விலக்க
23	6	ஞா	பஞ27-53	மகம் 45-33	ம45-33 சி	மாசதுர்த்திவிரதம்
24	7	திங்	சஷ் 27-15	பூரப்47-40	சி 60	க சஷ்டி உபவாஸம்
25	8	செ	சப்25-3	உத்48-18	அ48-18சி	ஆனி திருமஞ்சனம்
26	9	புத	அஷ்21-20	அஸ்த47-28	ம47-28 சி	தான்யமருக்க
27	10	விய	ந 16-3	சித்42-38	சி42 38அ	பிரயாணம் விலக்க
28	11	வெ	த9-45	சுவா 41-25	சித்60	சாரவிரதாரம்பம்
29	12	சனி	ஏ 2-18	விசா 36-28	சித-60	ஸ்மார்தஏகாதசி
30	13	ஞா	துவா54-8	அனு 30-38	ம60	அவயாகம்
31	14	திங்	திரி 35 45	கே 24-10	சித60	பிரதோஷம்
32	15	செ	தச36-55	மூலம் 17-13	அ 17-33சி	தட்சணாயண புண்